# பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் | | |
|---|---|---|---|
| வினாப்பத்திர அமைப்பு | i | - | ii |
| பொருளியல் வினாப்பத்திரம் I | 01 | - | 08 |
| பொருளியல் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 09 | - | 09 |
| பொருளியல் II இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 10 | - | 38 |
| குறிப்பு | | 39 | |

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019
## 21 - பொருளியல்
## (பழைய பாடத்திட்டம்)
## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

காலம் 2 மணித்தியாலம்
5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்கனுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 100

- பத்திரம் II

காலம் 3 மணித்தியாலம்
இப்பத்திரம் 2 பிரிவுகளைக் கொண்டது
(அ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் - 05
(ஆ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் 05

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 100 |
| | பத்திரம் II | 100 |

இறுதிப்புள்ளி $200 \div 2 = 100$

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ....................................................................... ✓ $\frac{4}{5}$
.......................................................................
.......................................................................

(ii) ....................................................................... ✓ $\frac{3}{5}$
.......................................................................
.......................................................................

(iii) ....................................................................... ✓ $\frac{3}{5}$
.......................................................................
.......................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

AL/2019/21/T-I (OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus**

**OLD**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2019**

05.08.2019 / 1300 – 1500

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | 1 - 2 | |
| 02 | 3 - 9 | |
| 03 | 10 - 14 | |
| 04 | 15 - 20 | |
| 05 | 21 - 24 | |
| 06 | 25 - 30 | |
| 07 | 31 - 35 | |
| 08 | 36 - 40 | |
| 09 | 41 - 46 | |
| 10 | 47 - 50 | |
| மொத்தம் | | |

சுட்டெண் : ......................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

**1.** பொருளியலின் மையப் பிரச்சினையாவது,
(1) பொதுப் பொருள்களையும் சேவைகளையும் வழங்கும் நோக்கில் ஜனநாயகரீதியிலான அரசியல் கட்டமைப்பினைத் தாபித்தலாகும்.
(2) பொருள்கள், வளங்களின் சார்பு அருமைத் தன்மையினைச் சரியாகப் பிரதிபலிக்கும் விதத்தில் விலைகளைத் தாபித்தலாகும்.
(3) மனித விருப்பங்களோடு ஒப்பிடுகையில் உற்பத்தி வளங்கள் அருமையாக காணப்படலாகும்.
(4) வறுமையைக் குறைப்பதற்காக பண வருமானத்தின் சம பங்கீட்டை எய்துதலாகும்.
(5) பேண்தகு அபிவிருத்தியை அடைதலாகும். (......)

**2.** மனித மூலதனம் என்பது,
(1) அரசாங்கமும் கூட்டுத்தாபனங்களும் தவிர தனிநபர்கள் வசமுள்ள எல்லா மூலதன வகைகளுமாகும்.
(2) அரசாங்கம் தவிர தனிநபர்கள், கூட்டுத்தாபனங்கள் வசமுள்ள எல்லா மூலதன வகைகளுமாகும்.
(3) மனிதர்களின் பயன்பாட்டுக்குப் பொருத்தமான பாதுகாப்புத் தராதரங்களையுடைய இயந்திரங்கள், பொறிகளாகும்.
(4) தொழிற்படையின் வசமுள்ள அறிவும் திறன்களுமாகும்.
(5) பாடசாலை, வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு நிர்மாணித்தலாகும். (......)

**3.** உற்பத்தி வினைத்திறன் என்பதால் கருதப்படுவது,
(1) மிகக்குறைந்த செலவையுடைய உற்பத்தி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதலாகும்.
(2) சமூகத்திற்கு அதிகம் தேவைப்படும் உற்பத்திச் சேர்க்கையை உற்பத்தி செய்தலாகும்.
(3) கிடைக்கப்பெறும் வளங்கள் யாவற்றையும் பூரண வேலைவாய்ப்பில் ஈடுபடுத்துதலாகும்.
(4) உற்பத்தி இயல்தகவு வளையியின் உள்ளே ஏதாவது ஒரு புள்ளியில் உற்பத்தி செய்தலாகும்.
(5) உழைப்புக்குப் பதிலாக மூலதனத்தைப் பதிலீடு செய்யும் தொழில்நுட்ப முன்னேற்றமாகும். (……)

**4.** உற்பத்தி வளங்கள் அருமைத்தன்மையைக் கொண்டுள்ளமையால் ஒரு பொருளின் அதிக அளவினை உற்பத்தி செய்துகொள்ள இன்னொரு பொருள் உற்பத்தியின் குறிப்பிட்ட அளவினை விட்டுக்கொடுக்க நேரிடும். இந்தப் பண்பை உள்ளடக்கிய எண்ணக்கரு
(1) சிறக்குமியல்பு (2) உள்ளார்ந்த செலவு (3) ஒப்பீட்டு நன்மை
(4) முழு நன்மை (5) அமையச் செலவு (……)

**5.** உற்பத்தி இயல்தகவு எல்லை வளையியைப் பயன்படுத்தி பின்வருவனவற்றுள் எதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைக் காட்டமுடியும்?
(1) வளையியின் ஒரு வலப்புற நகர்வு
(2) ஏற்கனவே உள்ள வளையியின் மீது மேல் நோக்கிய ஓர் அசைவு
(3) ஏற்கனவே உள்ள வளையியின் மீது கீழ் நோக்கிய ஓர் அசைவு
(4) வளையியின் வெளிப்புறமுள்ள ஒரு புள்ளியிலிருந்து வளையியின் மீது உள்ள ஒரு புள்ளியை நோக்கிய அசைவு
(5) வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியிலிருந்து வளையிக்கு உட்புறமுள்ள ஒரு புள்ளியை நோக்கிய அசைவு (……)

**6.** பொருளாதாரத்தில் எதனை உற்பத்தி செய்வது என்பதனை நுகர்வோர் தமது கேள்வியின் மூலம் தீர்மானிப்பர் என்ற கருத்து
(1) அரச கட்டற்ற பொருளாதாரம் எனப்படும்.
(2) சந்தைப் பொருளாதாரம் எனப்படும்.
(3) நுகர்வோன் இறைமை எனப்படும்.
(4) சுதந்திர முயற்சியாண்மை எனப்படும்.
(5) கலப்புப் பொருளாதாரம் எனப்படும். (……)

**7.** சாதாரண ஒரு பொருளின் விலை வீழ்ச்சியின் பதிலீட்டு விளைவு தொடர்பில் பின்வருவனவற்றுள் உண்மையானது எது?
(1) அது வருமான விளைவை ஈடுசெய்யும் விதத்தில் செயற்படும்.
(2) அது வருமான விளைவை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் செயற்படும்.
(3) அது வருமான விளைவை விடக் குறைந்த பெறுமானத்தைப் பெறும்.
(4) அது அப்பொருளின் கேள்வித் தொகையில் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதற்குக் காரணமாகும்.
(5) அது அப்பொருளின் கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாகும். (……)

**8.** பின்வருவனவற்றுள் எது ஒரு பொருளின் நிரம்பல் வளையியை வலப்புறம் நோக்கி நகர்த்துவதற்குக் காரணமாகும்?
(1) உற்பத்திச் செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) உற்பத்திச் செலவில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(3) விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (……)


**9.** பின்வருவனவற்றுள் எதன் மூலம் இரு பொருள்கள் ஒன்றுக்கொன்று பதிலீடானவை என்பது எடுத்துக்காட்டப்படும்?
(1) நேர்க்கணிய வருமானக் கேள்வி நெகிழ்ச்சி
(2) பூச்சியத்தை விடக் குறைந்த குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி
(3) ஒன்றுக்குக் குறைவான விலைக் கேள்வி நெகிழ்ச்சி
(4) நேர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி
(5) கிடையச்சுக்குச் சமாந்தரமான கேள்வி வளையி (……)

[பக். 3 ஐப் பார்க்க

**10.** வளிச் சீராக்கிகளின் உற்பத்தி மீது அரசாங்கம் வரி விதிக்குமாயின், வளிச் சீராக்கிகளுக்கான சந்தையில் பின்வருவனவற்றில் யாது நிகழும்?
(1) நிரம்பல் வளையியின் வழியே வலப்புறம் நோக்கிய ஓர் அசைவு ஏற்படும்.
(2) கேள்வி வளையியின் வழியே வலப்புறம் நோக்கிய ஓர் அசைவு ஏற்படும்.
(3) நிரம்பல் வளையி வலப்புறம் நோக்கி நகரும்.
(4) நிரம்பல் வளையி இடப்புறம் நோக்கி நகரும்.
(5) கேள்வி வளையி வலப்புறம் நோக்கி நகரும். (……)


**11.** ஒரு நிறுவனம் அதன் விலையை 20% அதிகரித்ததன் விளைவாக அதன் மொத்த வருவாய் 10% ஆல் அதிகரித்ததாயின், இவ்விலை வீச்சினுள் நிறுவனம் எதிர்நோக்கும் கேள்வியானது,
(1) நெகிழ்வற்றதாய் இருத்தல் வேண்டும்.
(2) நெகிழ்வுள்ளதாய் இருத்தல் வேண்டும்.
(3) அலகு நெகிழ்ச்சியுள்ளதாய் இருத்தல் வேண்டும்.
(4) பூரண நெகிழ்வுள்ளதாய் இருத்தல் வேண்டும்.
(5) பூரண நெகிழ்வற்றதாய் இருத்தல் வேண்டும். (……)

**12.** பின்வரும் வரைபடம் சந்தை நிரம்பல் வளையிகள் நான்கினைக் காட்டுகிறது. அந்நிரம்பல் வளையிகளின் விலை நெகிழ்ச்சி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?




(1) $S_1S_1$ வளையி விலை அதிகரிக்கும்போது குறைவடையும் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(2) $S_2S_2$ வளையி விலை அதிகரிக்கும்போது அதிகரிக்கும் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(3) $S_3S_3$ வளையி விலை அதிகரிக்கும்போது குறைவடையும் நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(4) $S_4S_4$ வளையி நிலையான முடிவிலி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
(5) $S_5S_5$ வளையி ஒன்றைவிடக் கூடிய நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும். (……)

**13.** பின்வரும் வரைபடம் அத்தியாவசிய நுகர்வுப்பொருளொன்றின் மீது மானியம் வழங்கப்பட முன்னரும் மானியம் வழங்கப்பட்ட பின்னருமான சந்தை நிலைமைகளைக் காட்டுகிறது.




மானியத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது?
(1) $OKLQ_2$ (2) $OCSQ_1$ (3) $OABQ_2$ (4) ABEC (5) KABL (……)

**14.** X பொருள் போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படுவதாகக் கருதுக. X பொருள் உற்பத்தியின்மீது அலகுவரி விதிக்கப்பட்டால் பின்வருவனவற்றுள் சரியானது எது?
(1) கேள்வி வளையி பூரண நெகிழ்வுள்ளதாயின், விலையானது வரியின் அளவினால் அதிகரிக்காது.
(2) கேள்வி வளையி பூரண நெகிழ்வற்றதாயின், விலையானது வரியின் அளவினால் அதிகரிக்காது.
(3) கேள்வி வளையியானது அதிக நெகிழ்வுள்ளதாகும்போது, நுகர்வோரின் வரிச்சுமை அதிகரிக்கும்.
(4) கேள்வி வளையியானது குறைந்த நெகிழ்வுள்ளதாகும்போது, நுகர்வோரின் வரிச்சுமை அதிகரிக்கும்.
(5) வரியின் விளைவாக நுகர்வோன் மிகை அதிகரிக்கும். (……)

**15.** குறைந்து செல்லும் எல்லை விளைவு தொழிற்படும்போது ஓர் உள்ளீட்டின்
(1) எல்லை உற்பத்தி அதிகரிக்கும். (2) எல்லை உற்பத்தி பூச்சியமாகும்.
(3) எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும். (4) மொத்த உற்பத்தி பூச்சியமாகும்.
(5) மொத்த உற்பத்தி எதிர்க்கணியமாகும். (......)

**16.** பின்வருவனவற்றுள் எது சிறிய ஒரு உணவகத்தின் உரிமையாளருக்கு உள்ளார்ந்த செலவாக அமையும்?
(1) உதவி முகாமையாளருக்கு வழங்கும் சம்பளம்
(2) மொத்த விற்பனையாளரிடமிருந்து கொள்வனவு செய்யும் இறைச்சிக்கான செலவு
(3) நீர் வழங்கல் சபையினால் விநியோகிக்கப்படும் நீருக்கான செலவு
(4) வேறு ஒரு தொழிலில் உரிமையாளரின் திறன்களைப் பயன்படுத்தினால் அதற்கு உரித்தாகும் பெறுமதி
(5) உள்ளூர் நிர்வாக அதிகாரசபைகளுக்குச் செலுத்திய சொத்து வரிக்கான செலவு (......)

**17.** பின்வருவனவற்றுள் எது குறுங்காலத்தில் செயற்படும் ஒரு நிறைபோட்டி நிறுவனம் தொடர்பில் சரியானதாகும்?
(1) நிறுவனம் எப்போதும் சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(2) விலை சராசரி மொத்தச் செலவை விடக் குறைந்தால் நிறுவனம் உற்பத்தியை முடிவுறுத்தும்.
(3) நிறுவனம் எப்போதும் நேர்க்கணிய பொருளியல் இலாபத்தை உழைக்கும்.
(4) விலை எல்லை வருவாய்க்குச் சமப்படும் இடத்தில் உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும்.
(5) நிறுவனம் நேர்க்கணிய இலாபத்தை அல்லது எதிர்க்கணிய இலாபத்தை அல்லது சாதாரண இலாபத்தை உழைக்க முடியும். (......)

**18.** பின்வருவனவற்றுள் எது நிறைபோட்டிச் சந்தைக் கட்டமைப்பின் ஒரு பண்பாகும்?
(1) நிறுவனங்கள் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்தல்
(2) பிரவேசத்திற்குத் தடைகள் காணப்படல்
(3) நிறுவனங்கள் விலையை உருவாக்கி, இலாபத்தை உச்சப்படுத்துதல்
(4) குறுங்காலத்தில் எப்போதும் சாதாரண இலாபத்தை உழைத்தல்
(5) மீளமுடியா இழப்புகளை நீக்கும் பொருட்டு அரசாங்கம் விலைகளை நிர்வகித்தல் (......)

**19.** ஒரு நிறுவனம் நிறைபோட்டிச் சந்தையில் இயங்குவதாகக் கருதுக. அந்நிறுவனம் தனது வெளியீட்டை 5% ஆல் அதிகரித்தால் நிறுவனத்தின் மொத்த வருவாயில் அதன் விளைவு யாது?
(1) மொத்த வருவாய் மாறாதிருக்கும்.
(2) மொத்த வருவாய் 5% ஆல் அதிகரிக்கும்.
(3) மொத்த வருவாய் 5% ஐ விடக் குறைவானளவு அதிகரிக்கும்.
(4) மொத்த வருவாய் 5% ஐ விடக் கூடுதலான அளவு அதிகரிக்கும்.
(5) மொத்த வருவாய் பூச்சியமாக மாறும். (......)

**20.** அரசாங்கத் துறையும் சர்வதேச வர்த்தகமும் அற்ற ஒரு பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்ட மாதிரியில் வீட்டுத்துறையானது,
(1) முடிவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வோரிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
(2) பொருள் சந்தையில் வளங்களின் விற்பனையின் மூலம் வருமானத்தைப் பெறும்.
(3) வணிக நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துவதற்காக அந்நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யும்.
(4) தமது உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளரிடமிருந்து வருமானத்தைப் பெறும்.
(5) சேமிப்புகளைப் பயன்படுத்தியமைக்காக உற்பத்தியாளர்களுக்கு வருமானங்களைக் கொடுப்பனவு செய்யும். (......)

**21.** பின்வரும் அட்டவணையில் கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் செலவீட்டு அணுகுமுறையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கங்கள் பற்றிய பெயரளவிலான பெறுமானங்கள் காட்டப்பட்டுள்ளன. (அனைத்து தரவுகளும் பில்லியன் ரூபாவிலாகும்.)

| ஆண்டு | C | I | G | X | M |
|---|---|---|---|---|---|
| 2017 | 600 | 200 | 100 | 250 | 150 |
| 2018 | 650 | 300 | 150 | 300 | 250 |

இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது 2017 இல் 100 இலிருந்து 2018 இல் 110 ஆக அதிகரித்ததாகக் கொள்க. 2018 இல் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் யாது?

(1) 5 % (2) 10 % (3) 12 % (4) 15 % (5) 16 % (……)

**22.** மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் இடைநிலைப் பொருள்களின் பெறுமதி **உள்ளடக்கப் படாமைக்கான** காரணம்,

(1) அவை நடப்பு வருடத்தில் நுகரப்படுகின்றமையாகும்.
(2) பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா இடைநிலைப் பொருள்கள் தொடர்பிலும் தகவல்களைத் திரட்டுதல் மிகக் கடினமான பணி என்பதனாலாகும்.
(3) அவை பொருள் சந்தைகளில் மாத்திரம் விற்கப்படுகின்றமையாகும்.
(4) சமூகத்தின் நலனை குறைவடையச் செய்யும் பொருள்கள் உள்ளடக்கப்படுவதனைத் தடுத்தலாகும்.
(5) அவற்றின் பெறுமதிகள் இருதடவைகள் கூட்டப்படுவதையும் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி மிகைமதிப்புடையதாவதையும் தடுத்தலாகும். (……)

**23.** அரசாங்கம் தனது செலவீட்டை ரூபா 600 பில்லியனால் அதிகரித்து, அச்செலவுகளை ஈடுசெய்வதற்காக வரிவிதிப்பை ரூபா 600 பில்லியனால் அதிகரித்தால், பின்வருவனவற்றுள் எந்தச் சேர்க்கை வரவுசெலவுத்திட்டத்தின் மீதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீதும் அது ஏற்படுத்தும் விளைவுகளைச் சரியாகக் காட்டும்?

| | வரவுசெலவுத்திட்டம் | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|
| (1) | மாறாதிருக்கும் | குறையும் |
| (2) | மிகைநிலை | குறையும் |
| (3) | மாறாதிருக்கும் | மாறாதிருக்கும் |
| (4) | மிகைநிலை | அதிகரிக்கும் |
| (5) | மாறாதிருக்கும் | அதிகரிக்கும் |

(……)

**24.** பின்வரும் அட்டவணையில் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகள், ஒரு பொருளாதாரத்தின் செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானத்திற்கும் மொத்த நுகர்வுச் செலவீட்டிற்கும் இடையிலான தொடர்பை விபரிக்கின்றன.

| செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் (பில்லியன் ரூபா) | மொத்த நுகர்வுச் செலவீடு (பில்லியன் ரூபா) |
|---|---|
| 800 | 700 |
| 860 | 745 |
| 920 | 790 |
| 980 | 835 |

இப் பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி தொடர்பில் பெறக்கூடிய முடிவு யாது?

(1) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் அதிகரிக்கும்போது அதுவும் அதிகரிக்கும்.
(2) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் அதிகரிக்கும்போது அது வீழ்ச்சியடையும்.
(3) எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.87 ஆகும்.
(4) எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.45 ஆகும்.
(5) எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.75 ஆகும். (……)

**25.** ஒரு பொருளாதாரம் தற்போது ரூபா 5 000 பில்லியன் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் இயங்குவதாகவும் அதன் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவும் கொள்க. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் வெளியீட்டு மட்டச் சமநிலை ரூபா 7 000 பில்லியன் ஆயின், பின்வரும் கொள்கைத் தீர்வுகளில் எது நிறைதொழில்மட்டம் எய்தப்படுவதை உறுதி செய்யும்?
(1) வரிகளை ரூபா 2 000 பில்லியனால் குறைத்தல்
(2) அரசாங்கச் செலவீடுகளை ரூபா 2 000 பில்லியனால் அதிகரித்தல்
(3) அரசாங்கச் செலவீடுகளை ரூபா 500 பில்லியனால் அதிகரித்தல்
(4) வரிகளை ரூபா 500 பில்லியனால் குறைத்தல்
(5) வரிகளை ரூபா 400 பில்லியனால் குறைத்தல் (......)

**26.** அரசதுறையற்ற ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில், மொத்த சேமிப்புச் சார்பு $S = -100 + 0.2Y$ ஆகவும், சமநிலைத் தேசிய வருமான மட்டம் ரூபா 2 000 பில்லியனாகவும் உள்ளதாகக் கருதுக. இப் பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது?
(1) ரூபா 1 00 பில்லியனாகும். (2) ரூபா 2 00 பில்லியனாகும்.
(3) ரூபா 3 00 பில்லியனாகும். (4) ரூபா 4 00 பில்லியனாகும்.
(5) ரூபா 5 00 பில்லியனாகும். (......)

**27.** பின்வரும் அட்டவணை கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் சிலவற்றைக் காட்டுகிறது. (எல்லா பெறுமானங்களும் பில்லியன் ரூபாவிலாகும்.)

| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | இறக்குமதிகள் (M) | வரிகள் (T) | முதலீடு (I) | ஏற்றுமதிகள் (X) | சேமிப்புகள் (S) |
|---|---|---|---|---|---|
| 30 | 70 | 40 | 50 | 80 | 60 |

பின்வருவனவற்றுள் இப்பொருளாதாரம் பற்றிய சரியான கூற்று எது?
(1) ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
(2) சேமிப்புகள் வரிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
(3) உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
(4) வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
(5) உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களுக்குச் சமமாவதால் பொருளாதாரம் சமநிலையில் இருக்கும். (......)

**28.** செலவுத் தூண்டல் பணவீக்கம் ஆரம்பமாவது,
(1) பணக் கூலி வீதங்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்புடனாகும்.
(2) அரசாங்கக் கொள்வனவுகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்புடனாகும்.
(3) பணத்தின் தொகையில் ஏற்படும் ஓர் அதிகரிப்புடனாகும்.
(4) பண வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்புடனாகும்.
(5) வரிவீதங்களில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியுடனாகும். (......)

**29.** கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 8 டிரில்லியனாகவும், பண நிரம்பல் ரூபா 2 டிரில்லியனாகவும் இருப்பின் பணத்தின் சுற்றோட்ட வேகம்
(1) 0.25 ஆகும். (2) 2 ஆகும். (3) 4 ஆகும். (4) 6 ஆகும். (5) 8 ஆகும். (......)

**30.** பணப் பெருக்கி என்பது,
(1) வங்கி வைப்புகளை வங்கி ஒதுக்குகளால் பிரித்துவரும் விகிதமாகும்.
(2) வங்கி வைப்புகளை உயர்வலுப் பணத்தினால் பிரித்துவரும் விகிதமாகும்.
(3) வங்கி வைப்புகளை மிகை ஒதுக்குகளால் பிரித்துவரும் விகிதமாகும்.
(4) பணநிரம்பலை உயர்வலுப் பணத்தினால் பிரித்துவரும் விகிதமாகும்.
(5) புழக்கப் பணத்தை வங்கி ஒதுக்குகளால் பிரித்துவரும் விகிதமாகும். (......)

**31.** மத்திய வங்கியின் பணநிரம்பலை அதிகரிக்க முடிவது,
(1) தம்மிடமுள்ள தங்க ஒதுக்குகளை வணிக வங்கிகளுக்கு விற்பதன் மூலமாகும்.
(2) தம்மிடமுள்ள வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளை விற்பதன் மூலமாகும்.
(3) திறந்த சந்தையில் அரசாங்க முறிகளைக் கொள்வனவு செய்வதன் மூலமாகும்.
(4) வெளிநாட்டு மத்திய வங்கிகளிடமிருந்து தங்கத்தைக் கொள்வனவு செய்வதன் மூலமாகும்.
(5) வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து ஒதுக்குகளைக் கடனாகப் பெறுவதன் மூலமாகும். (……)

**32.** திறந்த சந்தை நடவடிக்கை என்பது,
(1) கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளை கொள்வனவு, விற்பனை செய்தலாகும்.
(2) மத்திய வங்கியானது வணிக வங்கிகளுக்குக் கடன்களை வழங்குதலாகும்.
(3) மத்திய வங்கியினால் அரச பிணையங்கள் கொள்வனவு, விற்பனை செய்யப்படுதலாகும்.
(4) அரசாங்கம் வெளிநாட்டு முறிகளைக் கொள்வனவு செய்யப்படுதலாகும்.
(5) ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மானியங்களை வழங்குதலாகும். (……)


**33.** நியதி ஒதுக்குத்தேவை 15% சதவீதமாக இருப்பதாகவும், ஒரு வணிக வங்கி ரூபா 2 000 புதிய வைப்பினைப் பெறுவதாகவும் கருதுக. இதன் விளைவாக பின்வருவனவற்றுள் வங்கியின் ஐந்தொகையில் ஏற்படக்கூடிய மாற்றம் எது?


| | **பொறுப்புகள்** | **தேவைப்படும் ஒதுக்குகள்** |
|---|---|---|
| (1) | ரூபா 2 000 இனால் அதிகரிக்கும் | ரூபா 1 700 இனால் அதிகரிக்கும் |
| (2) | ரூபா 2 000 இனால் அதிகரிக்கும் | ரூபா 300 இனால் அதிகரிக்கும் |
| (3) | ரூபா 2 000 இனால் அதிகரிக்கும் | மாறாதிருக்கும் |
| (4) | ரூபா 2 000 இனால் குறையும் | ரூபா 300 இனால் குறையும் |
| (5) | ரூபா 2 000 இனால் அதிகரிக்கும் | ரூபா 1 700 இனால் குறையும் |

(……)

**34.** பொதுப் பொருள் என்பது,
(1) பொது மக்கள் பணம் செலுத்திப் பெறவேண்டிய பொருளாகும்.
(2) நுகர்வில் போட்டித்தன்மை அற்ற பொருளாகும்.
(3) தனியார் பொருளைவிட விலை கூடிய ஒரு பொருளாகும்.
(4) நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும் ஒரு பொருளாகும்.
(5) எதிர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும் ஒரு பொருளாகும். (……)

**35.** பின்வரும் வரைபடங்கள் **A, B** ஆகிய இரு பொருள்களின் போட்டிச் சந்தை நிலைமைகளைக் காட்டுகின்றன. இங்கு MSC என்பது எல்லைச் சமூக செலவு ஆகும். MPC என்பது எல்லைத் தனியார் செலவு ஆகும்.




இவ் வரைபடங்களின் அடிப்படையில் பெறக்கூடிய சரியான முடிவு,
(1) இரு வரைபடங்களும் வெளிவாரிகள் நிலவுவதைக் காட்டுகின்றன.
(2) இரு வரைபடங்களும் எதிர்க்கணிய வெளிவாரிகள் நிலவுவதைக் காட்டுகின்றன.
(3) இரு வரைபடங்களும் நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவுவதைக் காட்டுகின்றன.
(4) வரைபடம் **A** குறை உற்பத்தியின் காரணமாக ஏற்படும் வினைத்திறனின்மையைக் காட்டுகின்றது.
(5) வரைபடம் **B** மிகை உற்பத்தியின் காரணமாக ஏற்படும் வினைத்திறனின்மையைக் காட்டுகின்றது. (……)

**36.** 'அரசாங்கத் தோல்வி' ஏற்படுவது,
(1) ஒரு சந்தையில் சமூகச் செலவுகள் சமூக நன்மைகளைவிட உயர்வாக உள்ள போதாகும்.
(2) அரசாங்கம் சந்தையில் தலையீடு செய்யத் தவறுவதனாலாகும்.
(3) சந்தையில் வெளிவாரிகள் காணப்படும் போதாகும்.
(4) அரசாங்கத் தலையீடானது தாராள சந்தைத் தீர்வுடன் ஒப்பிடுமிடத்து தேறிய நலன் இழப்புக்கு இட்டுச்செல்லும் போதாகும்.
(5) உற்பத்தி, வளப்பங்கீட்டில் காணப்படும் வினைத்திறனற்ற தன்மையை அரசாங்கம் நீக்கத்தவறும் போதாகும். (……)

**37.** விருத்திமுறை வருமான வரிவீதக் கட்டமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படும்போது செல்வந்தர்கள் வரியாகச் செலுத்துவது,
(1) தமது வருமானத்தில் ஏழைகளைவிடக் குறைவான சதவீதத்தையாகும்.
(2) ஏழைகளைவிடக் குறைவான ரூபாப் பெறுமதியினையாகும்.
(3) வருமான மட்டம் எதுவாயிருப்பினும் தமது வருமானத்தில் நிலையானதொரு வீதத்தையாகும்.
(4) வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்திலிருந்து படிப்படியாக அதிகரிக்கும் வீதமொன்றையாகும்.
(5) வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்திலிருந்து படிப்படியாகக் குறையும் வீதமொன்றையாகும். (……)

**38.** 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் இலங்கையின் மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற பொதுப் படுகடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவு?

| | **2017** | **2018** |
|---|---|---|
| (1) | 76.9 | 82.9 |
| (2) | 79.1 | 80.2 |
| (3) | 80.0 | 90.0 |
| (4) | 74.5 | 85.0 |
| (5) | 78.5 | 79.5 |

(……)

**39.** பின்வருவனவற்றுள் மிக அண்மையில் இலங்கையுடன் தாராள வர்த்தக உடன்படிக்கை செய்துகொண்டுள்ள நாடு எது?
(1) இந்தியா (2) சீனா (3) வங்காளதேசம்
(4) சிங்கப்பூர் (5) பாக்கிஸ்தான் (……)

**40.** பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் பண்ட வர்த்தக மாற்றுவிகிதச் சுட்டியுடன் தொடர்புடைய தரவுகளைக் காட்டுகிறது.

| **ஆண்டு** | **பண்ட வர்த்தக மாற்றுவிகிதச் சுட்டி** |
|---|---|
| 2014 | 100 |
| 2016 | 110 |
| 2018 | 134 |

அட்டவணையிலுள்ள தரவுகளின் அடிப்படையில் நாம் பெறக்கூடிய முடிவு யாதெனில், 2014 - 2018 காலப்பகுதியில்,
(1) இறக்குமதி விலைகளோடு ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகள் மிகத் துரிதமாக அதிகரித்தன.
(2) ஏற்றுமதி விலைகளோடு ஒப்பிடுகையில் இறக்குமதி விலைகள் அதிகரித்தன.
(3) ஏற்றுமதிகளின் பருமன் இறக்குமதிகளின் பருமனை விட அதிகரித்தது.
(4) இறக்குமதிகளின் பருமனோடு ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் பருமன் துரிதமாக அதிகரித்தது.
(5) வர்த்தக நிலுவை மிகை நிலை அதிகரித்தது. (……)

**41.** அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டில் நீர் மின்சார உற்பத்திகளுக்காக ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்டியெழுப்ப கனடா ஒரு நிதியுதவியை வழங்குவதாகக் கருதுக. கனடாவின் சென்மதி நிலுவையில் இது உள்ளடக்கப்படுவது,
(1) மூலதனக் கணக்கில் ஒரு செலவாக ஆகும்.
(2) நிதிக் கணக்கில் ஒரு செலவாக ஆகும்.
(3) பணிகள் கணக்கில் ஒரு செலவாக ஆகும்.
(4) முதனிலை வருமானக் கணக்கில் ஒரு வரவாக ஆகும்.
(5) இரண்டாம் நிலை வருமானக் கணக்கில் ஒரு வரவாக ஆகும். (……)

**42.** குறித்தவொரு நாட்டின் புழக்க நாணயத்தின் பெறுமதித் தேய்வினால் ஏற்படக்கூடிய விளைவு
(1) பணவீக்க வீதம் அதிகரித்தலாகும்.
(2) ஏற்றுமதிகளின் இலாப எல்லை வீழ்ச்சியடைதலாகும்.
(3) வேலையின்மை அதிகரித்தலாகும்.
(4) வர்த்தக மாற்று விகிதம் முன்னேற்றமடைதலாகும்.
(5) வெளிநாட்டு மூலதன நிதிகளின் உட்பாய்ச்சல்கள் அதிகரித்தலாகும். (……)

**43.** நிலையான நாணயமாற்றுவீதம் நிலவும் ஒரு நாட்டின் பணவீக்கம் சார்பளவில் அதன் வர்த்தகப் பங்காளிகளை விட கூடுதலாக அதிகரிப்பதாகக் கொள்க. அதன் விளைவாக ஏற்றுமதிகள், இறக்குமதிகளின் மீது பெரும்பாலும் ஏற்படக்கூடிய தாக்கம் யாது?

| | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** |
|---|---|---|
| (1) | குறையும் | குறையும் |
| (2) | குறையும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | குறையும் |
| (4) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (5) | மாறாதிருக்கும் | மாறாதிருக்கும் |

(……)

**44.** மானுட அபிவிருத்திச் சுட்டெண்ணானது (HDI) சமூக அடைவுகளுடன் தொடர்புடைய பரந்துபட்டதொரு துறையை தனிக்கலப்புச் சுட்டெண்ணில் சுருக்கித் தருவது,
(1) ஏற்றதாழ்வுகளைக் குறைக்கும் சதவீதம், மனித வள அபிவிருத்தி வீதம், எழுத்தறிவு வீதம் ஆகிய காரணிகளை உள்ளடக்குவதன் மூலமாகும்.
(2) நீண்ட ஆயுள், கல்வி, வாழ்க்கைத்தரம் ஆகிய காரணிகளை உள்ளடக்குவதன் மூலமாகும்.
(3) குறைந்தபட்ச பாடசாலைக் கல்வி, வளர்ந்தோர் எழுத்தறிவு, மூன்றாம்நிலைக் கல்வியின் அடைவுகள் ஆகிய காரணிகளை உள்ளடக்குவதன் மூலமாகும்.
(4) மனிதவளப் பயிற்சி, அபிவிருத்தி, புத்தாக்கம் ஆகிய காரணிகளை உள்ளடக்குவதன் மூலமாகும்.
(5) சிசு மரணம், வளர்ந்தோர் எழுத்தறிவு, தலைக்குரிய வருமானம் ஆகிய காரணிகளை உள்ளடக்குவதன் மூலமாகும். (……)

**45.** கீழ்மட்ட நடுத்தர வருமான நாடுகளுக்கான சர்வதேச வறுமைக் கோடு
(1) 1.25 ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகும்.
(2) 1.90 ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகும்.
(3) 3.20 ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகும்.
(4) 5.50 ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகும்.
(5) 21.70 ஐக்கிய அமெரிக்க டொலர் ஆகும். (……)

**46.** 2016 ஆம் ஆண்டின் தலைக்குரிய வறுமைக் குறிகாட்டியின் அடிப்படையில் மிகக் குறைந்த வறுமை மட்டத்தையும் அதிகூடிய வறுமை மட்டத்தையும் கொண்டுள்ள மாவட்டங்கள் முறையே
(1) கம்பஹா, முல்லைத்தீவு
(2) கொழும்பு, கிளிநொச்சி
(3) கம்பஹா, மட்டக்களப்பு
(4) கொழும்பு, திருகோணமலை
(5) அம்பாந்தோட்டை, வவுனியா (……)

**47.** சமூகத்தின் மிகச் செல்வந்த 10% சதவீதமானோரிடமிருந்து சமூகத்தின் மிக வறிய 10% சதவீதமானோரை நோக்கிய ஒரு வருமான மீள்பங்கீட்டை மேற்கொண்டால்,
(1) ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^{o}$ கோட்டிற்கு அருகில் செல்லும்.
(2) ஜினி குணகம் குறைவடைவதுடன் லோரன்ஸ் வளையி $45^{o}$ கோட்டிற்கு அருகில் செல்லும்.
(3) ஜினி குணகம் குறைவடைவதுடன் லோரன்ஸ் வளையி $45^{o}$ கோட்டிலிருந்து விலகிச் செல்லும்.
(4) ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^{o}$ கோட்டிலிருந்து விலகிச் செல்லும்.
(5) ஜினி குணகம் அதிகரிப்பதுடன் லோரன்ஸ் வளையி $45^{o}$ கோட்டின் மீது அமையும். (……)

**48.** பின்வரும் அட்டவணை கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் தொழில் சந்தை பற்றிய தரவுகளைக் காட்டுகிறது.

| ஆண்டு | தொழில் வாய்ப்பில் உள்ள நபர்களின் எண்ணிக்கை (மில்லியனில்) | தொழிற்படை (மில்லியனில்) | 15 வயது, அதற்கு மேற்பட்ட வீட்டுத்துறை சனத்தொகை (மில்லியனில்) |
|---|---|---|---|
| 2017 | 27 | 30 | 60 |
| 2018 | 32 | 36 | 80 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
(1) 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல் தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் குறைவாக இருந்தது.
(2) 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல் தொழிலின்மை வீதம் குறைவாக இருந்தது.
(3) 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல் தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் உயர்வாக இருந்தது.
(4) 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் ஒன்றுக்கொன்று சமனாக இருந்தது.
(5) 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் தொழிலின்மை வீதம் ஒன்றுக்கொன்று சமனாக இருந்தது. (……)

**49.** இலங்கையில் மொத்த தங்கியிருத்தல் விகிதம் வரைவிலக்கணப்படுத்தப்படுவது,
(1) 65 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையின் சதவீதமாக ஆகும்.
(2) குடித்தொகையில் வளர்ந்தோருக்கும் சிறுவர்களுக்கும் இடையிலான விகிதமாக ஆகும்.
(3) 10 வயதுக்குக் குறைந்த, 60 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையின் சதவீதமாக ஆகும்.
(4) 15 வயதுக்குக் குறைந்த, 64 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையின் சதவீதமாக ஆகும்.
(5) தொழில்புரியா வயது குடித்தொகையை தொழில்புரியும் வயது குடித்தொகையின் சதவீதமாக ஆகும். (……)

**50.** 2016 இல் நடத்தப்பட்ட வீட்டுத்துறை வருமான, செலவீட்டு ஆய்வின் படி, இலங்கையின் மிகச் செல்வந்த 20% வீதத்தினரும் மிக வறிய 20% சதவீதத்தினரும் பெற்ற வருமானப் பங்குகள் முறையே
(1) 50.8% , 4.8% ஆகும். (2) 45.1% , 4.5% ஆகும்.
(3) 54.1% , 6.1% ஆகும். (4) 62.3% , 3.2% ஆகும்.
(5) 53.3% , 5.6% ஆகும். (……)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

## පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය பாட இலக்கம் **21** විෂයය பாடம் **பொருளியல்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 1 | 31. | 3 | 41. | 2 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 5 | 32. | 3 | 42. | 1 |
| 03. | 1 | 13. | 5 | 23. | 5 | 33. | 2 | 43. | 3 |
| 04. | 5 | 14. | 4 | 24. | 5 | 34. | 2 | 44. | 2 |
| 05. | 1 | 15. | 3 | 25. | 4 | 35. | 1 | 45. | 3 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 3 | 36. | 4 | 46. | 2 |
| 07. | 2 | 17. | 5 | 27. | 4 | 37. | 4 | 47. | 2 |
| 08. | 2 | 18. | 1 | 28. | 1 | 38. | 1 | 48. | 1 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 3 | 39. | 4 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 4 | 40. | 1 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

AL/2019/21/T II (OLD)
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

06.08.2019 / 1300 – 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ உப பிரிவு **'அ'**, உப பிரிவு **'ஆ'** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) பின்வருவன எவ்வகை உற்பத்தி வளங்களில் உள்ளடக்கப்படும்?

(அ) தொழிலற்ற ஓர் ஊழியர்
(ஆ) லக்விஜய நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம்
(இ) நுவரெலியாவில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டம்
(ஈ) சிங்கராஜ வனம்

(i)

(அ) உழைப்பு **(01 புள்ளி)**

(ஆ) மூலதனம் **(01 புள்ளி)**

(இ) மூலதனம் **(01 புள்ளி)**

(ஈ) நிலம் **(01 புள்ளி)**

(ii) உற்பத்தி இயல்தகவு வளையி அடிப்படையாகக் கொண்டுள்ள எடுகோள்கள் யாவை?

உற்பத்தி இயல்தகவு வளையி பின்வரும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. தரப்பட்ட காலப்பகுதி ஒன்றில் வளங்களின் அளவு நிலையானதாகும். அதாவது அக்கால பகுதியில் சமூகத்தின் வளங்களின் கையிருப்பின் அளவும் அதன் தரமும் மாறாததாகும்.

2. நிறை தொழில் மட்டத்தையும் முழு உற்பத்தியையும் அடையும் வண்ணம் எல்லா வளங்களும் பயன்படுத்தப்படும் / வளங்களை உத்தமமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தல்.

3. தரப்பட்ட காலப்பகுதியில் தொழில்நுட்ப மட்டம் மாறாதிருக்கும்.

4. வளங்கள் இருபொருள்களின் உற்பத்தியில் மாத்திரம் பயன்படுத்தப்படும்.

5. உற்பத்தி வளங்கள் மாற்றுப் பயன்பாடுடையனவாகும்.


**(ஒவ்வொன்றுக்கு 01 புள்ளி எவையேனும் நான்கிற்கு 04 புள்ளிகள்)**

(iii) உற்பத்தி இயல்தகவு வளையியில் அதிகரித்துச் செல்லும் அமையச் செலவுகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குக. அமையச் செலவு மாறாதிருக்குமாயின் அவ்வளையி எவ்வாறான தோற்றத்தைப் பெறும்? உமது விடையை வரைபடங்கள் மூலம் விளக்குக.

- அதிகரிக்கும் அமையச் செலவு காணப்படும் போது PPC யானது ஆரம்ப புள்ளிக்கு குழிவானதாக மாறும் அல்லது வெளிநோக்கி குவிவானதாக அமையும்.

- உற்பத்தி இயல்தகவு வளையியின் வழியே மேலிலிருந்து கீழ்நோக்கி அசையும் போது கிடையச்சில் உள்ள பொருளின் உற்பத்தியை சம அளவுகளால் அதிகரிக்கும் போது PPC யின் சரிவு படிப்படியாக அதிகரித்துச் செல்லும் (அதாவது எல்லை அமையச் செலவு அதிகரித்துச் செல்லும்)

**(PPC யின் வடிவத்திற்கும் அதிகரிக்கும் அமையச் செலவு பற்றிய விளக்கத்திற்கும் 01 புள்ளி)**





**(For the diagram, 01 mark)**

- மாற்றா அமையச் செலவு காணப்படுமாயின் PPC நேர் கோடாக அமையும்.

- அந்த PPC யின் வழியே மேலிலிருந்து கீழே அசையும் போது ஒரு பொருளின் உற்பத்தி சம அளவுகளால் அதிகரிக்கும் போது மற்றைய பொருளின் உற்பத்தி அதே அளவினால் வீழ்ச்சியடையும். எனவே அமையச் செலவு மாறாதிருக்கும் அதாவது வளையியின் சரிவு நிலையானதாக இருக்கும்.

**(PPC யின் வடிவத்திற்கும் மாறா அமையச் செலவு பற்றிய விளக்கத்திற்கும் 01 புள்ளி)**

**(நேர்கோடு என்று மட்டும் குறிப்பிட்டிருப்பினும் 01 புள்ளி வழங்கலாம்.)**




**(வரைபடத்திற்கு 01 புள்ளி)**

(iv) பொருளாதார முறைமைகளை வகைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் தகுதிவிதிகள் யாவை?

1. அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான தீர்மானங்கள் மற்றும் அத்தீர்மானங்களை ஒருங்கிணைக்கும் பொறிமுறை.
2. உற்பத்தி வளங்ககளின் உரிமை மற்றும் காப்புரிமைகளின் தன்மை.
3. பொருளாதாரத்தின் தீர்மானம் எடுக்கும் கூறுகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஊக்குவிப்புப் பொறிமுறை.
4. வருமான மீள் – பங்கீடு மற்றும் சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்களின் தன்மை.
5. அரசியல், சமய சம்பிரதாய விதிகள் மற்றும் தத்துவங்கள்

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**
**(முதல் 3 விடயங்களுக்கும் 04 புள்ளிகள் வழங்கலாம்)**

(v) வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பொருளாதார வினைத்திறனை அடைவதற்குத் தேவையான நிபந்தனைகளைச் சுருக்கமாக விளக்குக.

- சமூகத்தில் உள்ள பிரசைகளின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வரையறுக்கப்பட்ட வளக்கங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவது பொருளாதார வினைத்திறன் என வரைவிலக்கணப்படுத்தப்படும்.

**(01 புள்ளி)**

- பொருளாதார வினைத்திறனை அடைய இரண்டு நிபந்தனைகள் ஒன்றாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவையாவன :
  உற்பத்தி வினைத்திறன்
  ஒதுக்கீட்டு வினைத்திறன் **(01 புள்ளி)**

- உற்பத்தி வினைத்திறனானது நிறை தொழில் மட்டம் மற்றும் முழு உற்பத்தி ஆகிய இரு நிபந்தனைகளாக பூர்த்தி செய்யப்படும் போது அடையப்பெறும். **(01 புள்ளி)**

- ஒதுக்கீட்டு வினைத்திறனானது மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட வளங்களை முடிந்தளவு வினைத்திறனாகப் பயன்படுத்துதலைக் கருதும்.

- ஒதுக்கீட்டு வினைத்திறனின் கீழ் சமூகத்தினால் மிகவும் விரும்பப்படும் பொருள்களும் கேள்விகளும் வழங்கப்படும்.

- விலை எல்லைச் செலவுக்கும் எல்லை நன்மைகளுக்கும் சமப்படும் போது ஒதுக்கீட்டு வினைத்திறன் அடையப்பெறும். P = MC = MB

**(01 புள்ளி)**

**2.** போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளுக்கான கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

கேள்விச் சமன்பாடு: $Q_D = 100 - 2P$ நிரம்பல் சமன்பாடு: $Q_S = -30 + 3P$

(i) இப்பொருளுக்கான சமநிலை விலையையும் தொகையையும் காண்க.

QD = QS
100 - 2 P = - 30 + 3 P
5P = 130
P = 130 / 5
P = 26

QD = 100 - 2P
= 100 - 2 x 26
= 48

QS = - 30 + (3x26)
= 48

சமநிலை விலை ரூபா 26 **(02 புள்ளிகள்)**
சமநிலை தொகை 48 அலகுகள் **(02 புள்ளிகள்)**

**(வரைபடத்தின் மூலம் கணிப்பிடப்பட்டிருப்பினும் புள்ளிகள் வழங்கலாம்)**

(ii) சந்தைச் சமநிலையின்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக.

விலை கேள்வி நெகிழ்ச்சி $= \triangle Qd / \triangle P \times P/Q$ $\quad b \times \frac{P}{Qd}$ **(சூத்திரத்திற்கு 1 புள்ளிகள்)**

$= -2 \times 26/48$

$= -1.08$ **(சூத்திரத்திற்கு 02 புள்ளிகள்)**

**(02 புள்ளிகள்)**

(iii) இந்நிலையில் இப்பொருளின் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அலகொன்றுக்கு ரூபா 5 மானியம் வழங்கத் தீர்மானிப்பதாகக் கொள்க. மானியம் வழங்கப்பட்ட பின்னர் இப்பொருளின் சமநிலை விலையையும் தொகையையும் கணிப்பிடுக.

$QD = QS$

$100 - 2P_b = -30 + 3P$

$100 - 2P_b = -30 + 3(\mathrm{P_b} + \mathrm{S})$

**(மானியத்திற்கு பின்னர் $\mathrm{P_s}\ \mathrm{P_b}$ என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளைக் காட்ட 01 புள்ளி)**

$100 - 2P_b = -30 + 3\left(P_b + 15\right)$

**(சூத்திரத்தில் இலக்கங்களைப் பிரதியிட 01 புள்ளி)**

$100 - 2P_b = -30 + 3P_b + 15$

$5P_b = 115$

$P_b = 115/5$

$\underline{P_b = 23}$

$QD = 100 - \left(2 \times 23\right)$ $\quad QS = -30 + \left(3 \times 28\right)$

$QD = 100 - 46$ $\quad QS = \underline{54}$

$QD = \underline{54}$

மானியத்தின் பின்னர் சமநிலை விலை ரூபா 23 **(01 புள்ளி)**

மானியத்தின் பின்னர் சமநிலைத் தொகை 54 அலகுகள் **(01 புள்ளி)**

(iv) மானியத்திற்கு முன்னரும் மானியத்திற்குப் பின்னருமான பொருளாதார மிகைகளை ஒப்பிடுக.

- மானியத்தின் முன்னர் உச்சபட்ச கேள்வி விலை

$$QD = 100 - 2P$$
$$0 = 100 - 2P$$
$$2P = 100$$
$$P = 100/2$$
$$P = 50$$

- நுகர்வோன் மிகை $= \left[(50-26)\times 48\right]/2$
$= 576$

- மானியத்திற்கு முன்னர் ஆகக் குறைந்த நிரம்பல் விலை

$$QS = -30 + 3P$$
$$0 = -30 + 3P$$
$$-3P = -30$$
$$P = -30/-3$$
$$P = 10$$

மாற்றீட்டு முறை
$= \left[(50-10)\times 48\right]/2$
$= 960$

- நுகர்வோர் மிகை $= \left[(26-10)\times 48\right]/2$
$= 384$

- மானியத்திற்கு முன் பொருளாதார நிலை $= 576 + 384$
$= 960$

மானியத்தின் பின்னர் நுகர்வோர் மிகை $= \left[(50-23)\times 54\right]/2$
$= 729$

உற்பத்தியாளர் மிகை $= \left[(28-10)\times 54\right]/2$
$= 486$

மானியத்தின் காரணமாக அரசாங்க செலவீடு = மானியம் × புதிய சமநிலைத்தொகை
$= 5\times 54$
$= 270$ **(01 புள்ளி)**

மானியத்தின் பின்னர் பொருளாதார மிகை $= 729 + 486 - 270$
$= 945$

| | | | |
|---|---|---|---|
| மானியத்தின் பின்னர் பொருளாதார மிகை | = | ரூபா 945 | **(01 புள்ளி)** |
| மானியத்தின் முன்னர் பொருளாதார மிகை | = | ரூபா 960 | **(01 புள்ளி)** |
| மானியத்தின் காரணமாக பொருளாதார மிகையில் ஏற்படும் வீழ்ச்சி | = | 15 | **(01 புள்ளி)** |
| அல்லது | | | |
| (மாற்றம் | = | - 15) | |

**(தலா 01 புள்ளி வீதம் ஏதாவது மூன்று காரணங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(v) மானியம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இச்சந்தையில் வள ஒதுக்கீட்டின் வினைத்திறன் தொடர்பில் நீர் என்ன முடிவுக்கு வருவீர்? (04 புள்ளிகள்

- இச்சந்தையில் மானியம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் உற்பத்தியின் எல்லைச் செலவு எல்லை நன்மைகளை விஞ்சிச் செல்லும். **MC > MB**

  இச்சந்தையில் உற்பத்தியின் எல்லைச் செலவு பொருளுக்கு அறவிடப்படும் விலையை விட அதிகமாகும். **MC>P** **(02 புள்ளிகள்)**

- மானியத்தின் காரணமாக சந்தையில் ஒதுக்கீட்டு வினைத்திறனின்மை நிலவுகிறது. அதாவது $P \neq MC \neq MB$ **(02 புள்ளிகள்)**

**3.** (i) குறைந்து செல்லும் எல்லை விளைவுகளும் குறைவடையும் அளவுத்திட்ட விளைவுகளும் ஒரு நிறுவனத்தின் உற்பத்திச் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என விளக்குக. (04 புள்ளிகள்)

- குறுங்கால உற்பத்திச் செயன்முறையில் மாறும் உள்ளீட்டின் அதிகரித்த அளவை ஒரு நிலையான காரணி யுடன் இணைத்துப் பயன்படுத்தும் போது மாறும் காரணியின் எல்லை உற்பத்தி ஒரு எல்லைக்கப்பால் குறைவடையும். இது உற்பத்தியில் குறைந்து செல்லும் எல்லை விளைவு எனக் கூறப்படும்.

  **(01 புள்ளிகள்)**

- குறைந்து செல்லும் எல்லை விளைவுகள் செயற்படும் போது நிறுவனத்தின் எல்லைச் செலவுகள் குறுங்காலத்தில் அதிகரிக்கும். குறைந்து செல்லும் எல்லை விளைவுகள் மற்றும் நிறுவனத்தின் எல்லைச் செலவுகளுக்கும் இடையில் எதிர்கணியத் தொடர்பு காணப்படும்.

  **(01 புள்ளிகள்)**

- நீண்டகால உற்பத்திச் செயன்முறையில் எல்லா உற்பத்தி உள்ளீடுகளும் ஏதோ ஒரு சதவீதத்தினால் மாற்றியமைக்கும் (அதிகரிக்கும்) போது வெளியீடானது உள்ளீடுகள் அதிகரிக்கப்படும் வீதத்தை விட குறைவான வீதத்தில் அதிகரிக்கும் இச் செயன்பாடு குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு எனப்படும். நீண்டகால உற்பத்திச் செயன்முறையின் அளவுத்திட்ட சிக்கனமின்மைகள் காரணமாக இது ஏற்படுகின்றது.

  **(01 புள்ளிகள்)**

- நீண்டகால உற்பத்தி செயன்முறையானது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவினை காட்டும் போது நீண்டகால சராசரி மொத்தச் செலவு அதிகரிக்கும். **(01 புள்ளிகள்)**

(ii) பின்வரும் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு நிறுவனத்தின் குறுங்கால எல்லைச் செலவு வளையியிலும் அதன் மொத்த நிலையான செலவு வளையியிலும் எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தும்?

(அ) கூலி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(ஆ) சொத்து வரிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(இ) புதிய மூலதனக் கருவிகளின் கொள்வனவு விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(ஈ) எரிபொருள் விலைகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (04 புள்ளிகள்)

| | எல்லைச் செலவு வளையி | மொத்த நிலையான செலவு வளையி |
|---|---|---|
| (அ) | மேல்நோக்கி நகரும் | மாறாது |
| (ஆ) | மாறாது | கீழ்நோக்கி நகரும் |
| (இ) | மாறாது | மேல்நோக்கி நகரும் |
| (ஈ) | மேல்நோக்கி நகரும் | மாறாது |

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி, மொத்தம் 04 புள்ளிகள்)**

**வளையிகளின் மீதான விளைவுகள் குறிப்பிடப்படாதபோது அதிகபட்சம் 02 புள்ளிகள் வழங்கப்படலாம். எல்லைச் செலவுகளும் மொத்த நிலையான செலவும் மட்டும் குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள் மட்டும் வழங்கப்படல் வேண்டும்.**

(iii) ஒரு கைத்தொழிலின் சந்தைக் கட்டமைப்பைத் தீர்மானிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படும் காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

1. சந்தையில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை

2. பொருளின் தன்மை
இதன் மூலம் சந்தையில் விற்கப்படும் பொருள்கள் ஓரினத்தன்மை வாய்ந்தனவா அல்லது மேம்படுத்தப்பட்டவையா என்பதை விளக்கும்.


3. சந்தையில் புதிய நிறுவனங்கள் நுழைவதில் காணப்படும் இலகு தன்மை அல்லது கடினத்தன்மையும் சந்தைகளில் ஏற்கனவே உள்ள நிறுவனங்கள் வெளியேறுவதில் உள்ள இலகு தன்மை அல்லது கடினத்தன்மை.

4. சந்தையில் நிறுவனங்களுக்கு இடையில் நிலவும் போட்டியின் தன்மை.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) நிறைபோட்டி உற்பத்தி நிறுவனமொன்று எவ்வகையான கேள்வி வளையியை எதிர்கொள்ளும்? அதற்கான காரணங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

- நிறைபோட்டிச் சந்தையிலுள்ள ஒரு நிறுவனம் பூரண நெகிழ்ச்சியுள்ள கேள்வி வளையியை எதிர்நோக்கும் கேள்வி வளையி கிடையத்துக்கு சமாந்தரமாகக் காணப்படும்.
(மாற்றீடான விடை வரைபடம்)




**(01 புள்ளி)**

- நிறைபோட்டிச் சந்தையில் ஓரினத்தன்மை வாய்ந்த பொரு.ள்களை விற்பனை செய்யும் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும். எனவே ஒரு தனி நிறுவனம் சந்தையில் கேள்வி நிரம்பல் நிலைமையில் செல்வாக்குச் செலுத்த முடியாது. ஒவ்வொரு நிறுவனமும் சந்தையோடு ஒப்பிடுகையில் மிகவும் சிறியதாகும். **(01 புள்ளி)**

- நிறைபோட்டிச் சந்தையில் கொள்வனவாளர்கள் சந்தை பற்றிய ( தகவல்களை ) அறிவுள்ளவர்களாவர். எனவே நிறுவனமானது வேறுபட்ட விலைகளை அறவிட முடியாது. **(01 புள்ளி)**

- நிறுவனங்கள் சந்தையில் தீர்மானிக்கப்பட்ட விலையை ஏற்று நிலவும் சந்தை விலைகளில் தான் விரும்பும் எந்தத் தொகையையும் விற்பனை செய்யலாம்.

- நிறைபோட்டிச் சந்தையில் இயங்கும் நிறுவனம் விலையை ஏற்போராகச் செயற்படும். அது விலையை உருவாக்குவோனாகச் செயற்பட முடியாது.

- தனி நிறுவனம் விலை மீது செல்வாக்கு செலுத்த முடியாது. எனவே அதன் கேள்வி வளையி கிடையச்சுக்கு சமாந்தரமாகக் காணப்படும்.

**(ஏதாவது ஒன்றிற்கு 01 புள்ளி)**

(v) குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்று பின்வரும் ஒவ்வொரு நிலைமையையும் எதிர்கொள்ளலாம். இவ்வொவ்வொரு நிலைமையின்போதும் நிறுவனம் குறுங்காலத்தில் உற்பத்தியில் ஈடுபட வேண்டுமா? அல்லது குறுங்காலத்தில் உற்பத்தியை நிறுத்த வேண்டுமா? அல்லது குறுங்காலத்தில் நிறுவனம் என்ன செய்வதெனத் தீர்மானிக்க மேலதிக தகவல்கள் தேவைப்படுமா? என்பதைக் குறிப்பிடுக.

(அ) எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகமாக இருத்தல்

(ஆ) எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் மொத்த மாறுஞ்செலவு மொத்த வருவாயைவிட அதிகமாக இருத்தல்

(இ) எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் மொத்த வருவாய் மொத்த நிலையான செலவுகளைவிட அதிகமாக இருத்தல்

(ஈ) எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் விலையானது சராசரி மொத்தச் செலவைவிட அதிகமாக இருத்தல் (04 புள்ளிகள்)

(அ) மேலதிக தகவல் தேவை

(ஆ) நிறுவனம் தொழிலை முடிவுறுத்த வேண்டும்.

(இ) மேலதிக தகவல்கள் தேவை

(ஈ) நிறுவனம் குறுங்காலத்தில் தொடர்ந்து இயங்க வேண்டும்.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

**4.** (i) உண்மையிலேயே செலவீட்டு, வருமான அணுகுமுறைகள் உற்பத்தியை அளவிடாதபோது செலவீட்டு அணுகுமுறையை அல்லது வருமான அணுகுமுறையைப் பயன்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியை அளவிட முடிவது எவ்வாறு என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

- பொதுவாக மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீடானது உற்பத்தி அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். உற்பத்தி அணுகுமுறையின் படி மொத்த உற்பத்தியானது எல்லா உற்பத்தியாளர்களாலும் மேற்கொள்ளப்படும் மொத்த பெறுமதிச் சேர்க்கையின் மொத்த அளவாகும். வேறுவிதமாகக் கூறுகையில் தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் புதிய இறுதிப் பொருள்கள் சேவைகளின் பெறுமதியே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். ( அல்லது மொ.உ.உற்பத்தியானது தரப்பட்ட ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சோவைகளின் கேள்விகளின் மொத்த சந்தைப் பெறுமதியாகும்.)

**(01 புள்ளி)**

மொ. உ. உ = மொத்த கூட்டப் பெறுமதி + வரிகள் – மானியங்கள்

**(01 புள்ளி)**

- உற்பத்தி அணுகுமுறையானது ஒரு பொருளாதாரத்தின் வளச் சொந்தக்காரர்களுக்கு வருமானப் பாய்ச்சலொன்றை உருவாக்குகிறது. உழைப்புக்கு வழங்கப்படும் கூலி நிலத்திற்கு வழங்கப்படும். வாடகை, மூலதனத்தின் விளைவுக்கு வழங்கப்படும் வட்டி, கம்பனி இலாபங்கள் மற்றும் தேறிய நேரில் வரிகள்

அல்லது

- வேறு வகையில் கூறுவதாயின் மொ.உ. உற்பத்தியானது உழைப்புக்கு வழங்கப்படும் வேதனங்கள் உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான வரிகள், நிலையான மூலதனத்தின் நுகர்வு மற்றும் செயற்பாட்டு மிகை.

**(01 புள்ளி)**

- செலவீட்டு அணுகுமுறையின் கீழ் நாட்டின் வெளியீட்டின் இறுதிப் பயன்பாட்டை கருத்திற் கொள்வதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை நுகர்வுச் செலவீடு, அரசாங்கச் செலவீடு, முதலீட்டுச் செலவீடு மற்றும் தேறிய ஏற்றுமதிகள் என்பவற்றைக் கூட்டுவதன் மூலம் பெறலாம். இவ்வணுகுமுறையின் படி $GDP = C + I + G + NX$ (மொ.உ.உ = நுகர்வுச் செலவீடு + முதலீட்டு செலவீடு + அரசாங்கச் செலவீடு + தேறிய ஏற்றுமதிகள் )

**(01 புள்ளி)**

(ii) கையிருப்பு மாற்றங்கள் முதலீட்டுச் செலவீட்டின் ஒரு கூறாக உள்ளடக்கப்படுவதேன்? (04 புள்ளிகள்)

- தொகைக் கையிருப்புக்கள் ( அ ) எதிர்கால உற்பத்திக்காக நிறுவனங்கள் வசமிருக்கும் சரக்குகள் ( ஆ ) அரைகுறையாக செய்து முடிக்கப்பட்ட பொருள் கையிருப்புக்கள் ( இ ) உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட விற்கப்படாதுள்ள முடிவுப் பொருள்கள் என்பவற்றை உள்ளடக்கும் கையிருப்பு மாற்றங்கள் என்பது வருட ஆரம்பத்தில் இருந்த கையிருப்புகளின் சந்தைப் பெறுமதிக்குப் வருட இறுதியில் காணப்படும் கையிருப்புகளின் சந்தைப் பெறுமதிகளுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

**(02 புள்ளிகள்)**

- கையிருப்பு மாற்றங்கள் திட்டமிடப்பட்டதாகவோ, திட்டமிடப்படாததாகவோ இருக்கலாம். கையிருப்புத் தொகைகள் நிறுவனங்களின் வெளியீட்டு வீதத்திலும் விற்பனையிலும் ஏற்படும் தற்காலிக ஏற்ற இறக்கங்களை சமாளித்து பொருள் தொடர்பாக எழும் கேள்வியை பூர்த்தி செய்யும் வல்லமையை நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. (உற்பத்தி விநியோகம் தடையின்றி வினைத்திறனாக இடம்பெறும்)

- வருட ஆரம்பத்தில் இருந்த கையிருப்புக்களை விட வருட இறுதியில் இருக்கும் கையிருப்புக்கள் அதிகமாயின் கையிருப்புத் திரட்சி அல்லது கையிருப்புக்கள் மீதான முதலீடு நேர்க்கணியமானதாக இருக்கும். இது நடைமுறை முதலீடுகளின் ஒரு கூறாகக் கணிக்கப்படும். காரணம் கையிருப்புகளும்

உற்பத்திப் பொருள்களின் ஒரு (அரைகுறையாக செய்து முடிக்கப்பட்டிருந்த போதிலும்) கூறாகும். ஏனெனில் அவை நடைமுறை நுகர்வுகளில் உள்ளடக்கப்படாமையிலாகும்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது மொத்த நடைமுறை வெளியீட்டை கணிப்பிட வடிவமைக்கப்பட்டுள்ளது எனவே நடைமுறை வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆனால் விற்கப்படாத பொருள்களை உள்ளடக்க முயற்சி செய்யப்படுவது அவசியம்.

- எனவே தான் கையிருப்பு மாற்றங்கள் முதலீட்டு செலவீட்டின் ஒரு கூறாக செலவீட்டு அணுகுமுறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுகிறது.

**(02 புள்ளிகள்)**

(iii) செலவீட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பதில் கருத்திற்கொள்ளப்படும் பிரதான செலவீட்டுக் கூறுகள் யாவை? (04 புள்ளிகள்)

1. தனியார் நுகர்வுச் செலவீடு – C
2. அரசாங்கச் செலவீடு – G
3. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் – I
4. தேறிய ஏற்றுமதிகள் – NX

அல்லது

$$Y = C + G + I + \left(X - M\right) \Big/ \; X - M \quad or \quad NX$$

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) பின்வரும் ஒவ்வொன்றையும் வரைவிலக்கணப்படுத்துக.
(அ) மொத்த தேசிய வருமானம்

- மொத்த தேசிய வருமானம் என்பது ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்திச் செயல்முறையில் பங்களிப்புச் செய்ததன் மூலம் ஒரு பொருளாதாரத்தின் வதிவாளர்களால் உழைக்கப்பட்ட மொத்த காரணி வருமானங்களை குறிக்கின்றது.

- மொ.தே.வருமானம் = மொ.உ.உ + வெளிநாட்டிலிருந்தான உழைப்பு வருமானங்கள் மற்றும் சொத்து வருமானங்கள் – வெளிநாடுகளுக்குச் செலுத்திய உழைப்பு வருமானங்கள் மற்றும் சொத்து வருமானங்கள்

(வரைவிலக்கணத்திற்கு அல்லது சரியான சமன்பாட்டிற்கு) **(01 புள்ளிகள்)**

(ஆ) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்

- மொத்த தேசிய செலவிடதக்க வருமானம் என்பது ஒரு நாட்டிற்கு நுகர்வு மற்றும் சேமிப்பினை மேற்கொள்ள கிடைக்கும் வருமானமாகும்.

- மொத்த தேசிய செலவிடத்தக்க வருமானம் = மொத்தத் தேசிய வருமானம் + வெளிநாட்டிலிருந்தான நடைமுறை மாற்றல்கள் – வெளிநாடுகளுக்கு செலுத்திய நடைமுறை மாற்றல்கள் ( இரண்டாம் நிலை வருமானம்)

**(வரைவிலக்கணத்திலிருந்து அல்லது சரியான சமன்பாட்டிற்கு 01 புள்ளி)**

(இ) தனிநபர் வருமானம்

- மொத்த தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத் துறையினருக்கு கிடைக்காத வருமானங்களை கழித்து, தேசிய வருமானத்தில் உள்ளடங்காத ஆனால் வீட்டுத் துறையினருக்கு கிடைக்கின்ற வருமானங்களை கூட்டுவதன் மூலம் பெறப்படும்.

- தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்புக்கள் / வரிகள் + கம்பனி வருமான வரி + பிடித்து வைக்கப்பட்ட உழைப்புக்கள்) + அரசாங்கத்தின் மாற்றல் செலுத்தல்கள்.

**(வரைவிலக்கணம் அல்லது சரியான சமன்பாட்டிற்கு 01 புள்ளி)**

(ஈ) செலவிடத்தக்க தனிநபர் வருமானம் (04 புள்ளிகள்)

- செலவிடதக்க தனிநபர் வருமானம் என்பது நுகர்வு மற்றும் சேமிப்பை மேற்கொள்ள கிடைக்கத்தக்கதாக உள்ள வருமானமாகும்.

- செலவிடதக்க தனிநபர் வருமானம் = தனிநபர் வருமானம் – தனி நபர் மீதான வரிகள்

**(வரைவிலக்கணம் அல்லது சரியான சமன்பாட்டிற்கு 01 புள்ளி)**

(v) "பொருளாதார விளக்கம், பகுப்பாய்வு ஆகியவற்றுக்கு தேசிய கணக்கீட்டுத் தரவுகள் அதிசக்திமிக்க கருவிகளாகும்." விளக்குக. (04 புள்ளிகள்)

- தேசிய கணக்கீட்டுப் புள்ளி விபரங்கள் ஒரு நாட்டி.ற்கு பின்வரும் நன்மைகளைத் தருக.

1. பொருளாதார வளர்ச்சியை அளவிடல்.
2. சர்வதேச ஒப்பீடுகளை மேற்கொள்ளல்.
3. மொத்த விலைமட்டப் போக்குகளை இனங்காணல்.
4. பொருளாதாரக் கட்டமைப்பை ஆய்வு செய்தல்.
5. வருமானப் பங்கீட்டின் தன்மையையும் அதன் மாற்றங்களையும் இனங்காணல்.
6. பேரினப் பொருளாதார மாறிகளுக்கிடையிலான தொடர்புகளை இனங்காணல்.
7. பொருளாதார, சமூக கொள்கைகளைத் திட்டமிட உதவுகிறது.
8. பேரினப் பொருளாதார மாறிகளின் போக்குகளை எதிர்வு கூறல்

இவற்றின் காரணமாக முழுப்பொருளாதாரத்தையும் அதன் செயலாற்றத்தையும் விளங்கிக் கொள்ள தேசிய கணக்கீடுகள் ஒரு வலுவான கருவியாகும்.

**(ஒவ்வொரு நன்மைக்கும் 01 புள்ளி மொத்தம் 04 புள்ளிகள்)**

**5.** (i) எல்லை நுகர்வு நாட்டம் (MPC) என்பதால் கருதப்படுவதென்ன? அது ஏன் ஒன்றைவிடக் குறைவான பெறுமானத்தைக் கொண்டிருக்கும்? (04 புள்ளிகள்)

- எல்லை நுகர்வு நாட்டம் என்பது வருமான மட்ட மாற்றத்திற்கும் நுகர்வு மட்டமாற்றத்திற்கும் இடையிலான விகிதமாகும்.
  அல்லது
  எல்லை நுகர்வு நாட்டம் ( MPC ) = $\frac{\Delta C}{\Delta Y}$ அல்லது $\frac{\Delta C}{\Delta YD}$ **(2 புள்ளிகள் )**

- வருமான அதிகரிப்பு நுகர்வு அதிகரிப்பைத் தூண்டிய போதிலும் நுகர்வு அதிகரிப்பானது வருமான அதிகரிப்பின் அதே அளவினால் நுகர்வினை அதிகரிக்காது. கெயின்ஸ் எனும் அறிஞர் கூறியது போல MPC யானது எப்போதும் நேர்க்கணியமாக இருக்கும் ஆனால் அதன் பெறுமதி ஒன்றை விடக் குறைவாகவே இருக்கும். அல்லது $\Delta Y = \Delta C + \Delta S$
  0<mpc>1
  $$= \frac{\Delta Y}{\Delta Y} = \frac{\Delta C}{\Delta Y} = \frac{\Delta S}{\Delta Y}$$
  $$= 1 = MPC + MPS$$
  **(சரியான விளக்கத்திற்கு 02 புள்ளி)**

(ii) பெருக்கியின் பெறுமானம், எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமானத்துடன் நேர்க்கணிய ரீதியில் தொடர்புபட்டிருப்பது ஏன்? (04 புள்ளிகள்)

- பெருக்கி என்பது தன்னிச்சையான செலவீட்டில் ஏற்படும் ஒருமாற்றம் தேசிய வருமானத்தைதன்னிச்சையான செலவீட்டில் ஏற்படும் மாற்றத்தை விட அதிகளவில் அதிகரிக்கும் நிலையினைக் குறிக்கும்.

- பெருக்கியானது எல்லைச் சேமிப்பு நாட்டத்தின் தலைகீழ் வடிவமாகும். எல்லை சேமிப்பு நாட்டத்தை 1 - MPC என்னும் சமன்பாட்டை பயன்படுத்திப் பெறலாம்.

- எனவே பெருக்கியின் சமன்பாடு

$$K = \frac{1}{1 - mpc} \quad \text{அல்லது} \quad K = \frac{1}{MPS}$$

**(MPC, MPS என்பவற்றைப் பயன்படுத்தி பெருக்கலை விளக்க 02 புள்ளிகள் )**

- உள்நாட்டு உற்பத்தி செய்த பொருள்கள் சேவைகள் மீதான MPC யில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு பெருக்கியின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் (மறுதலையாக) MPC இற்கும் பெருக்கியின் பெறுமதிக்கும் இடையில் நேர்கணிய தொடர்பு உண்டு. (கணிப்பீடும் பயன்படுத்தலாம்)

**(நேர்கணிய தொடர்பு உண்டு என்பதை விளக்க 02 புள்ளிகள் )**

(iii) கருதுகோள்ரீதியான பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச் செலவு பின்வரும் சமன்பாட்டினால் காட்டப்பட்டுள்ளது.

$$C = 50 + 0.75\,Y_D$$

மேலும் எல்லா வருமான மட்டங்களிலும் முதலீட்டுச் செலவானது ரூபா 700 பில்லியனாக உள்ளதாகவும் தேறிய ஏற்றுமதிகள் பூச்சியமாக உள்ளதாகவும் கருதுக. அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டம் சமநிலையில் உள்ளதுடன் அரசாங்கத்தின் கொள்வனவுகளும் வரிகளும் தலா ரூபா 500 பில்லியனாக உள்ளன.

(அ) சமநிலை மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

$$Y = E$$
$$Y = C + I + G + X - M$$
$$Y = 50 + 0.75Y_D + 700 + 500$$
$$Y = 50 + 0.75\left(Y - 500\right) + 700 + 500$$

**(சமன்பாட்டிற்கு 01 புள்ளி 01 புள்ளி)**

$$Y = 1250 + 0.75Y - 375$$
$$Y = 875 + 0.75Y$$
$$Y - 0.75Y = 875$$
$$0.25Y = 875$$
$$Y = 875 / 0.25$$
$$Y = 3500$$

**(01 புள்ளி)**

(ஆ) சாத்திய மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ரூபா 5 000 பில்லியனாயின், பொருளாதாரத்தில் சுருக்க இடைவெளியோ அல்லது பணவீக்க இடைவெளியோ காணப்படுமா? அவ்வாறாயின் அதன் அளவு யாது? (02 புள்ளிகள்)


- பொருளாதாரத்தில் பணச்சுருக்க இடைவெளி நிலவுகிறது. **(01 புள்ளி)**

$$YF = -Y$$
$$5000 - 3500 = 1500$$ **(01 புள்ளி)**

(iv) பெருக்கி விளைவு என்றால் என்ன? அரசாங்கக் கொள்வனவுகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியின் பெருக்கி விளைவை 45° கோட்டு வரைபடத்தைப் பயன்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

- தன்னிச்சையான செலவீடுகளில் ஏற்படும் ஆரம்ப அதிகரிப்பானது தேசிய வருமான அல்லது வெளியீட்டில் ஏற்படும் பன்மடங்கு அதிகரிப்பு பெருக்கி விளைவு எனப்படுகிறது.

**(02 புள்ளிகள்)**




**வரைபடம் 02 புள்ளிகள்**

(v) வரியில் ஏற்படும் மாற்றங்களைவிட அரசாங்கக் கொள்வனவுகளில் மாற்றம் ஏற்பட்டால் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அதிக அளவினால் மாற்றமடைவது ஏன்? (04 புள்ளிகள்)

- அரசாங்கக் கொள்வனவுகளில் ஏற்படும் மாற்றம் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரியளவு பெருக்கி விளைவை கொண்டிருக்கும்.

**(02 புள்ளிகள்)**

- வரியில் ஏற்படும் மாற்றம் மொத்தக் கேள்வியை வரியின் ஆரம்ப மாற்றத்தின் அளவினால் குறைவடையச் செய்யாது காரணம் வரியில் ஏற்படும் மாற்றம் மொத்த கேள்வியை நேரடியாகப் பாதிக்காது. வரி யில் ஏற்படும் மாற்றம் ஆரம்பத்தில் செலவிடதக்க வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நுகர்வில் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே வரியில் ஏற்படுத்தும் மாற்றத்தை விட அரசாங்கக் கொள்வனவுகளில் ஏற்படும் மாற்றம் காரணமாக மெய் மொ. உ. உ. அதிகளவில் அதிகரிக்கும்.

**(02 புள்ளிகள்)**

மாற்றீடான விடை

அரசாங்க செலவீட்டுப் பெருக்கி $= K_G = 1/1 - MPC$

வரிப்பெருக்கி

$$KT = \frac{-MPC}{1-MPC}$$

**(ஒவ்வொரு பெருக்கிக்கும் 02 புள்ளிகள் விளக்கத்திற்கு 02 புள்ளிகள் மொத்தம் 04 புள்ளிகள்)**

### உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) பரிமாற்றச் சமன்பாட்டைக் குறிப்பிட்டு, அதன் ஒவ்வொரு மாறியையும் இனங்காண்க. (04 புள்ளிகள்)

MV = PT **(பரிமாற்றச் சமன்பாடு 02 புள்ளிகள்)**

இங்கு

M = பணநிரம்பல் அல்லது பணத்தொகை

V = பணத்தின் புழக்க சுற்றோட்ட வேகம்

P = விலை மட்டம்

T = பறிமாற்றங்களின் எண்ணிக்கை / கொடுக்கல் வாங்கல்களின் அளவு

**(எல்லா மாறிகளையும் இனங்காண 02 புள்ளிகள் அல்லாது விடில் புள்ளிகள் இல்லை)**

மாற்றீடான விடை

MV = PY **(பரிமாற்றச் சமன்பாடு 02 புள்ளிகள்)**

இங்கு

M = பணநிரம்பல் அல்லது பணத்தொகை

V = பணத்தின் புழுக்கம் சுற்றோட்ட வேகம்

P = விலை மட்டம்

Y = இறுதி வெளியீடு அல்லது மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி


அல்லது PY = பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி

**(எல்லா மாறிகளையும் இனங்காண 02 புள்ளிகள் அல்லாது விடில் புள்ளிகள் இல்லை)**

(ii) "பணவீக்கமானது மிகைக் கேள்வியினால் உருவாகிறது ஆயினும் அதிகரிக்கும் செலவுகளாலேயே அது நீடித்து நிற்கிறது." வரைபடங்களைப் பயன்படுத்தி இக்கூற்றினை விளக்குக. (04 புள்ளிகள்)


- பொது விலை மட்டத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு பணவீக்கம் எனப்படும். ADAS மாதிரியின் படி மொத்தக் கேள்வியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பொருளாதாரத்தில் மிகைக் கேள்வியை ஏற்படுத்தும். இது விலைகளில் அதிகரிப்பை ஏற்படுத்தும். **(01 புள்ளி)**

- AD இலிருந்து $AD_2$ வரையிலான அதிகரிப்பு விலை மட்டத்தில் $P_1$ இலிருந்து $P_2$ வரையிலான அதிகரிப்பை ஏற்படுத்தும் மிகைக் கேள்வி காணப்படும் போது உற்பத்தியாளர்கள் தமது விலைகளை அதிகரிக்கலாம் அத்துடன் உயர் இலாபத்தையும் எய்தலாம்.




**(01 புள்ளிகள்)**

- உற்பத்தி செலவுகளின் அதிகரிப்பின் காரணமாக பொருள்கள் சேவைகளின் மொத்த நிரம்பல் குறைவடையும் போது அது செலவுத் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.




**(01 புள்ளிகள்)**

- செலவுகளின் அதிகரிப்பினால் மொத்த நிரம்பலின் $AS_1$ இலிருந்து $AS_2$ வரையிலான வீழ்ச்சியானது விலை மட்டத்தை $P_1$ இலிருந்து $P_3$ வரையில் அதிகரிக்கும். **(01 புள்ளிகள்)**

(iii) பணமானது பயனுறுதி வாய்ந்த ஒரு பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படுவதற்குப் பூர்த்தி செய்யவேண்டிய தகுதிவிதிகள் யாவை? (04 புள்ளிகள்)

1. பரிமாற்ற ஊடகமாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
2. நீண்ட ஆயுள் கொண்டதாக இருக்க வேண்டும்.
3. ஓரினத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்.
4. சிறு அலகுகளாக பிரிபடும் தன்மை கொண்டிருக்க வேண்டும்.
5. இலகுவில் காவும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.
6. இலகுவில் போலிகளை உருவாக்க முடியாததாக இருக்க வேண்டும்.
7. பெறுமதி திரட்டாக இருக்க வேண்டும். காலப்பகுதியில் பெறுமதியை தேக்கி வைத்திருக்க வேண்டும்.

**(எவையேனும் நான்கு தகுதி விதிகளுக்கு 04 புள்ளிகள்)**

(iv) இலங்கையில் நிதி முறைமையில் உள்ளடங்கும் முக்கிய நிறுவனங்கள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

1. மத்திய வங்கி
2. உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
3. உரிமம் பெற்ற சிறக்கும் இயல்பு பெற்ற வங்கிகள்
4. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்
5. ஊழியர் சேமலாப நிதியம்
6. காப்புறுதிக் கம்பனிகள்
7. சிறக்குமியல்பு பெற்ற குத்தகைக் கம்பனிகள்

அல்லது

1. மத்திய வங்கி
2. இடைத்தரகு நிதி நிறுவனங்கள்
3. மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள்
4. நிதிச் சேவை வழங்கும் நிறுவனங்கள்

**(எவையேனும் நான்கு பிரதான நிறுவனங்களுக்கு 04 புள்ளிகள்)**

(v) $M_{2b}$, $M_4$ ஆகிய பணக் கூட்டுகளின் கூறுகளை இனங்காண்க. (04 புள்ளிகள்)

ஒன்றிணைந்த விரிந்த பண நிரம்பல்

$$M_{2b} = M_2 + 50\%\,TSD_{NRFC} + RD_{FCBU}$$

அல்லது $M_2$ = விரிந்த பண நிரம்பல்

($M_2 = M_1 + TSD_{P1}$, $M_1$ என்பது பொதுமக்களிடம் உள்ள பணம் - CP + வணிக வங்கிகளில் பொது மக்களின் கேள்வி வைப்புக்கள் - $DD_p$)

$TSD_{NRFC}$ யில் 50% = வதிவாளர் அல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் பொதுமக்கள் வைத்துள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்

$RD_{FCBU}$ = வெளிநாட்டு நாணய அலகுகளில் வதிவாளர்களின் வைப்புக்கள்

**(02 புள்ளிகள்)**

– சீராக்கம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் கரை கடந்த வங்கிக் கூறுகளில் வதிவாளர் வகை வைப்புக்களையும் உள்நாட்டு வங்கிக் கூறுகளில் உள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்களின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியிருக்கும். (DBUs)

**(01 புள்ளி)**

$M_4$

$M_4 = M_1$ + கிட்டிய பணம்

கிட்டிய பணம் = DBU + FCBU + LSB + RFC

DBU = உள்நாட்டு வங்கிக் கூறுகள்

FCBU = வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகள்

LSB = உரிமம் பெற்ற சிறக்குமியல்பு பெற்ற வங்கிகள்

RFC = பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது

LFC = உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் **(02 புள்ளிகள்)**

**7.** (i) நேர்க்கணிய வெளிவாரிகளும் எதிர்க்கணிய வெளிவாரிகளும் நிலவும்போது, சமநிலை வெளியீட்டு மட்டத்திற்கும் சமூகத்தின் உத்தம வெளியீட்டு மட்டத்திற்கும் இடையில் எத்தகைய வேறுபாடுகள் காணப்படும்? வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

– எல்லைத் தனியார் செலவுகளுக்கும் (MPC) எல்லை சமூக செலவுகளுக்கும் (MSC) இடையிலும் அதே போல எல்லைத் தனியார் நன்மைகளுக்கும் (PMB) எல்லைச் சமூக நன்மைகளுக்கும் (SMB) இடையில் நிலவும் வேறுபாடுகள் காரணமாக நேர்கணிய அல்லது எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகின்றன.

**(01 புள்ளிகள்)**

– உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரிகள் காணப்படும் போது எல்லைச் சமூக செலவு எல்லை தனியார் செலவை விஞ்சியதாக இருக்கும். இதனால் சந்தையின் சமநிலை வெளியீடு சமூக ரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டத்தை விட உயர்வாக இருக்கும்.


**(01 புள்ளிகள்)**

– மேலுள்ள வரைபடத்தில் சந்தைச் சம.நிலை வெளியீடு QP சமூகத்தின் வெளியீட்டு மட்டமாகிய QS இனை விஞ்சியதாக உள்ளது. இதன்போது மிகை உற்பத்தி நிலவும் மிகக்கூடியளவு பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்.

**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)**


– நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவும் போது எல்லைத் தனியார் செலவுகள் எல்லை சமூக செலவுகளை விட உயர்வாக இருக்கும். இதன் போது சமூகத்தின் உத்தம வெளியீட்டு மட்டமானது சந்தையின் வெளியீட்டு மட்டத்தை விட உயர்வாக இரு.க்கும் பின்வரு.ம் வரைபடம் உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரிகளைக் காட்டும்.

- பின்வரும் வரைபடம் உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகளைக் காட்டுகிறது.




- மேலுள்ள வரைபடத்தில் சந்தைச் சமநிலை வெளியீடு $Q_P$ சமூகத்தின் உத்தம வெளியீட்டு மட்டமாகிய $Q_S$ இனை விஞ்சியதாக உள்ளது. இதன் போது மிகை உற்பத்தி நிலவும் அதாவது மிகக்கூடியளவு பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்.


- நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவும் போது எல்லைத் தனியார் செலவுகள் எல்லை சமூக செலவுகளை விட உயர்வாக இருக்கும். இதன் போது சமூகத்தின் உத்தம வெளியீட்டு மட்டமானது சந்தையின் வெளியீட்டு மட்டத்தை விட உயர்வாக இருக்கும் பின்வரும் வரைபடம் உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரிகளைக் காட்டுகிறது.




- மேலுள்ள வரைபடத்தின் படி சமூக ரீதியில் உத்தம வெளியீட்டு மட்டம் QS ஆனது சந்தையின் வெளியீட்டு மட்டமாகிய QP யை விட உயர்வாக உள்ளது. எனவே இங்கே குறைவான உற்பத்தி ( கீழுற்பத்தி ) நிலவுகிறது.

- நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி நிலவும் போது எல்லைத் தனியார் நன்மைகள் எல்லைச் சமூக நன்மைகளை விட உயர்வாக இருக்கும். இதன்போது மிகையுற்பத்தி நிலவும்.


- பின்வரும் வரைபடம் நுகர்வில் எதிர்கணிய வெளிவாரிகளை காட்டுகிறது.




- மேலுள்ள வரைபடத்தின் படி சந்தைச் சமநிலை வெளியீடு $Q_P$ சமூக ரீதியில் உத்தம வெளியீட்டு மட்டமாகிய $Q_S$ ஐ விட உயர்வாகவுள்ளது. இதனால் மிகை நுகர்வு காணப்படுகிறது.

- நுகர்வில் நேர்கணிய வெளிவாரி நிலவும் போது எல்லை சமூக உண்மைகள் எல்லைத் தனியார் நன்மைகளை விட உயர்வாக இருக்கும் இதன்போது குறைவு நுகர்வு காணப்படும்.

- பின்வரும் வரைபடம் நேர்க்கணிய வெளிவாரியை காட்டுகிறது.




- மேலுள்ள வரைபடத்தின் சமூக ரீதியில் உத்தம வெளியீட்டு மட்டம் $Q_S$ ஆனது சந்தைச் சமநிலை வெளியீட்டு மட்டமாகிய $Q_P$ ஐ விட உயர்வாக உள்ளது. எனவே இங்கே குறை நுகர்வு நிலவுகிறது.

**(வரைபடங்கள் ஏதாவது இரண்டிற்கு 02 புள்ளிகள் இரண்டு விளக்கங்களுக்கு 02 புள்ளிகள்)**
**(சரியான வரைபடங்கள் உற்பத்தி / நுகர்வில் அமையலாம் நேர் + எதிர்)**

(ii) அரைகுறை பொதுப் பொருள்களினதும் மேன்மைப் பொருள்களினதும் வெளிப்படையான பண்புகளை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்

- அரைகுறை பொதுப் பொருள்கள் பகுதியளவில் (குறித்த இயலுமையை அடையும் வரை) விலக்கிவைக்க முடியாததாகவும் அரைவாசிப் போட்டி அற்றதுமான பொருள்களாகும்.

- போட்டி நுகர்வு அற்றது. இயலளவையெதும் வரை நுகர்வு செய்யப்படலாம். உதாரணமாக நெடுஞ்சாலைகள், கடற்கரைகள், சினிமா அரங்குகள், கலைக்கூடங்கள் என்பவற்றின் சேவை இயலளவை எட்டும் வரை நாட்டாக நுகர்வு செய்யப்படலாம் இவ்வெல்லைக்குள் ஒருவரது நுகர்வு இன்னொருவரது நுகர்வுச் சாத்தியத்தை பாதிக்காது.

- மறுபுறம் இத்தகைய பண்டங்களை நுகர்வோர் அடைவதைத் தடுக்கும் இயலுமை உண்டு. இதனால் தனியார் பொருள்களைப் போல நிரம்பலாளர்கள் நுகர்வோரை நுகர்விலிருந்து விலக்கி வைக்கலாம். இதனால் இவை அரைகுறைப் பொதுப்பொருள் எனவும் அழைக்கப்படுகின்றன.

  உதாரணமாக கொல்ப் விளையாட்டுக் கழகம் அல்லது நீச்சற்கழகமொன்று அதன் இயலளவை எட்டும் வரை நுகர்வுப் போட்டி இருக்காது. ஆனால் அக்கழகங்களின் அங்கத்துவத்தை மட்டுப்படுத்த முடியும். ஒருவர் நீச்சலில் ஈடுபடும் போது மற்றொருவர் அதில் ஈடுபடுவதில் இருந்து விலக்கப்படுகிறார் என்பது இதன் கருத்தல்ல. கூட்டாக நீச்சற் குளம் நிரப்பும் வரை நீச்சலில் ஈடுபடலாம். கொல்ப், டெனிஸ் போன்ற விளையாட்டுகளும் இத்தகைய தன்மை கொண்டவையாகும்.

**(உதாரணங்களைப் பயன்படுத்தி அரைகுறைப் பொருள்களை விளக்க 02 புள்ளிகள் வரைவிலக்கணத்துடன் சில உதாரணங்கள் தரப்பட்டால் 01 புள்ளி)**

- நுகர்வின் போது தனியார் நன்மைகளை விட சமூக நன்மைகள் உயர்வாகக் காணப்படும் பொருள்கள் மேன்மைப் பொருள்கள் எனப்படும்.
  உதாரணமாக கல்வி, சுகாதார சேவைகள், தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் போன்றன மேன்மைப் பொருளாகக் கருதப்படும்.

- கல்வியைப் பொறுத்தமட்டில் கல்விக்காக தாம் மேற்கொள்ள வேண்டிய அர்ப்பணிப்புக்கள் குறித்து அறிந்துள்ள போதிலும் எதிர்காலத்தில் அதனால் பெறக்கூடிய நல்ல தொழில், சம்பளம், திறன்கள், சமூக அந்தஸ்து நற்பிரஜையாக வாழ்தல் போன்றவற்றைக் படிக்கும் காலத்தில் கருத்திற் கொள்வதில்லை. எனவே கல்வி நுகர்வில் ஒரு நேர்கணிய வெளிவாரியை உருவாகிறது. தாராள சந்தை இதனை உள்ளடக்குவதில் தோல்வியடைந்து வருகிறது. இதனால் சந்தையானது கல்வியை சமூகத்தின் விரும்பத்தக்க உத்தம மட்டத்தை விட குறைவாகவே வழங்குகிறது.

- கல்வியானது ஏனையவர்களுக்கும் நன்மைகளை உருவாக்குகிறது. இதனை சமூகமானது அனுபவிக்கிறது. கல்வி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கையில் மூன்றாந் தரப்பினருக்கு ஏற்படும் கல்வியூடான நன்மைகள் குறித்து அறிந்திருக்க மாட்டார்.
  உதாரணமாக ஒரு தனிப்பட்ட மாணவர் தனது கல்வியினால் சமூகம் நன்மை பெறும் என்ற காரணத்தினால் நன்றாகக் கற்க வேண்டும் என்று உந்தப்பட மாட்டார்.

- மருத்துவப் பராமரிப்பும் ஒரு மேன்மை பண்டமாகும். உதாரணமாக ஒரு தொற்று நோய்க்கெதிராக தடுப்பூசி போட்டுக் கொள்வதனால் ஒருவர் தனிப்பட்ட நன்மையினை அடைகிறார். ஏனெனில் அதன் பின்னர் அவர் குறித்த நோய்த் தொற்றுக்கு ஆளாக மாட்டார். அதேவேளை நோய்த்தடுப்பு நடவடிக்கையின் மூலம்

மூன்றாந் தரப்பினருக்கு வெளிவாரி நன்மை ஏற்படுகிறது. நோய்த்தடுப்பு செய்து கொண்ட நபரிடமிருந்து சமூகத்திற்கு நோய்த்தொற்று ஏற்படாது என்பதே அந்நன்மையாகும்.

ஆனால் மற்றவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படக்கூடாது என்பதற்காக எவரும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில்லை.

**(மேன்மைப் பொருள்களின் பண்புகளை உதாரணங்களுடன் விளக்க 02 புள்ளிகள் வரைவிலக்கணத்துடன் ஓரிரு உதாரணங்கள் மட்டும் தரப்படின் 01 புள்ளி)**

(iii) இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினத்தின் பிரதான கூறுகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்


1. பொருட்கள் சேவைகள் மீதான செலவீடு
2. வட்டிச் செலுத்தல்கள்
3. நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்

**(3 பிரதான விடயங்களுக்கு 04 புள்ளிகள் 2 விடயங்கள் தரப்படின் 02 புள்ளிகள்)**

(iv) ‘வரியின் மிகைச் சுமை’ என்பதால் கருதப்படுவதென்ன? விலை நெகிழ்ச்சியற்ற கேள்வியையுடைய ஒரு பண்டத்தின் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரியின் மிகைச் சுமையினை வரைபடமொன்றைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்

- வரியின் மிகைச் சுமை என்பது வரியொன்றின் வினை.த்திறன் செலவாகும் இதனை வினைத்திறன் இழப்பு, மீளமுடியா இழப்பு எனவும் கூறலர்.
  வரியின் மிகைச் சுமையானது ஹேர்பெர்கர் முக்கோணம் என்னும் பகுதியினால் அளவிடப்படும்.

**(01 புள்ளி)**




**(வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)**

- பொருளானது கேள்வி நெகிழ்ச்சியற்றதாயின் வ்ரியின் மிகைச்சுமையினை உற்பத்தியாளரை விட நுகர்வோரே அதிகம் தாங்குவர். **(01 புள்ளிகள்)**

(v) கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இலங்கையில் வரவுசெலவுத்திட்டக் குறைநிலையை நிதியீட்டம் செய்யப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட மூலாதாரங்களையும் கருவிகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்

**பரவலாகப் பயன்படுத்தப்படும் மூலாதாரங்கள்**

1. வெளிநாட்டு நிதியிடல்
   சர்வதேச இறைமை முறிகளின் வெளியீடு
   செயற்றிட்ட கடன்கள்

2. உள்நாட்டு நிதியிடல்
   வங்கி – சந்தை கடன் பெறல்
   அ) மத்திய வங்கி
   ஆ) வணிக வங்கிகள்

   வங்கியல்லா – சந்தையில்லா.க் கடன்பெறல்
   அ) ஊழியர் சேமலாப நிதி
   ஆ) தேசிய சேமிப்பு வங்கி

**(ஒரு மூலாதாரத்திற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளி)**

**பரவலாகப் பயன்படுத்தும் கருவிகள்**

1. திறைசேரி பிணைமுறிகள்
2. திறைசேரி உண்டியல்கள்
3. இலங்கை அபிவிருத்தி முறிகள்
4. மத்திய வங்கியின் தற்காலிய முற்பணங்கள்
5. ரூபாய் கடன்கள்

**(ஒரு கருவிக்கு 1 புள்ளி இரு கருவிகளுக்கு 02 புள்ளிகள்)**

**8.** (i) A என்னும் நாடு தனது எல்லா வளங்களையும் பயன்படுத்தி X பொருளின் 80 அலகுகளை அல்லது Y பொருளின் 60 அலகுகளை உற்பத்தி செய்ய முடியுமென்றும், B என்னும் நாடு அவ்வாறு செய்வதன் மூலம் X பொருளின் 60 அலகுகளை அல்லது Y பொருளின் 60 அலகுகளை உற்பத்தி செய்ய முடியுமென்றும் கருதுக.

(அ) செலவுகள் மாறாதிருப்பதாகக் கருதி ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் எந்தப் பொருளில் சிறக்குமியல்பு அடையவேண்டும் எனக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

– X பொருளை உற்பத்தி செய்வதற்காக அமையச் செலவானது Y பொருளை விடக் குறைவாக உள்ளதால் A என்னும் நாடு X பொருளில் ஒப்பீட்டு நன்மைகளைக் கொண்டிருக்கும்.

A நாட்டில் X பொருளை உற்பத்தி செய்வதன் அடையச் செலவு = 60 / 80 = 0.7 5 y ஆகும்.

B நாட்டில் X பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு = 60/60 = 1.0 y ஆகும்.

**(01 புள்ளிகள்)**

B நாடு Y பொருளை உற்பத்தி செய்வதில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. காரணம் Y பொருளை உற்பத்தி செய்வதன் அமையச் செலவு X பொருளை விட குறைவாக உள்ளமையாகும்.

A நாட்டில் Y பொருளை உற்பத்தி செய்வதன் அடையச் செலவு = $80 / 60 = 1.3$ x ஆகும்.

B நாட்டில் Y பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு = $60/60 = 1.0$ x ஆகும்.

**(01 புள்ளிகள்)**

**(புள்ளிகள் வழங்கப்பட அமையச் செலவு கணிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)**

(ஆ) பரஸ்பர நன்மை தரவல்ல விதத்தில் வர்த்தகம் இடம்பெறவேண்டுமாயின், X, Y ஆகிய பொருள்களுக்கிடையிலான வர்த்தக மாற்றுவீதம் எந்த எல்லைகளுக்குள் இருக்க வேண்டும்? (02 புள்ளிகள்)

வர்த்தக மாற்று விகிதம்

பரஸ்பர நன்மையுள்ள விதத்தில் வர்த்தகம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் X பண்டமானது Y பண்டத்திற்காக 0.75 அலகுகளை விட அதிகமாகவும் 1.0 அலகினை விட குறைவானதாகவும் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும்.

Y பண்டமானது X பண்டத்திற்காக 1 அலகுகளை விட விட அதிகமாகவும் 1.3 அலகினை விட குறைவான தாகவும் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும். (1 – 1.3)

(ii) இலங்கை கைச்சாத்திட்டுள்ள (ratified) சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| APTAA | – | ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (1975) |
| ISFTA | – | இலங்கை இந்திய தாராள வர்த்தக உடன்படிக்கை (1998) |
| PSFTA | – | பாகிஸ்தான் இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கை (2005) |
| SAFTA | – | தெற்காசிய தாராள வர்த்தக உடன்படிக்கை (2006) |
| SSFTA | – | இலங்கை சிங்கப்பூர் தாராள வர்த்தக உடன்படிக்கை (2018) |

**(நான்கு வர்த்தக உடன்படிக்கைக்கு 04 புள்ளிகள்)**

(iii) கடந்த ஐந்தாண்டுகளில் இலங்கையின் வர்த்தக நிலுவைக் குறைநிலையினை கணிசமானளவு விரிவடையச் செய்வதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

1. ஏற்றுமதி வருவாய்களை விட இறக்குமதிச் செலவுகள் துரிதமாக அதிகரித்துள்ளன. ( இறக்குமதிச் செலவு களின் துரித அதிகரிப்புக்கு வாகன இறக்குமதிகளின் சடுதியான அதிகரிப்பு காரணமாகியது. கைத்தொழில் ஏற்றுமதி வருமானங்கள் மெதுவான ஒரு அதிகரிப்பை காட்டிய அதேவேளை விவசாய மற்றும் கனிம ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.)
2. மசகெண்ணைய் இறக்குமதிச் செலவின் அதிகரிப்பு
3. ஐக்கிய அமெரி.க்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் வீழ்ச்சியடைந்தமை.
4. பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் மெதுவாக பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார உறுதியற்ற தன்மையும்.
5. ஏற்றுமதிகள் போதியளவு பன்முகப்படுத்தப்படாமை.

**(ஏதாவது 4 விடயத்திற்கு 4 புள்ளிகள்)**

(iv) பின்வரும் அட்டவணை கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் சென்மதி நிலுவையின் உள்ளடக்கங்களைக் காட்டுகிறது.

| சென்மதி நிலுவையின் உள்ளடக்கம் | பில்லியன் ரூபா |
|---|---|
| வர்த்தக நிலுவை | - 960 |
| பணிகள் (தேறியது) | 340 |
| முதனிலை வருமானம் (தேறியது) | -230 |
| இரண்டாம் நிலை வருமானம் (தேறியது) | 630 |
| மூலதனக் கணக்கு (தேறியது) | 20 |

(அ) நடைமுறைக் கணக்கின் நிலுவை யாது? (02 புள்ளிகள்)

நடைமுறைக் கணக்கு நிலுவை = வர்த்தகக் கணக்கு நிலுவை + பணிகள் கணக்கு நிலுவை + முதனிலை வருமானக் கணக்கு நிலுவை + இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை

= - 960 + 340 + (-230) + 630

= - 1190 + 970

= - 200

(அ) நிதிக் கணக்கின் நிலுவை யாது? (02 புள்ளிகள்)

நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு நிலுவை = நடைமுறைக் கணக்கு நிலுவை + மூலதனக் கணக்கு நிலுவை

= - 220 + 20

= - 220

எனவே நிதிக் கணக்கு நிலுவை = - 200 ஆகும்.

(v) நாடுகளை முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்றுவீத முறைமையை நோக்கி மாற்றமடையச் செய்வதில் செல்வாக்குச் செலுத்திய பூரணமாக மிதக்கவிடப்பட்ட நாணயமாற்றுவீதங்களின் பிரதிகூலங்கள் யாவை? (04 புள்ளிகள்)

- முகாமை செய்யப்பட்ட மிதக்க விடலுடன் ஒப்பிடுகையில் பூரணமாக மிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீத முறையின் குறைபாடுகள்.

1. பூரணமாக மிதக்க விடப்பட்ட நாணயமாற்று வீத முறைமை வியாபார நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கின்றது. இது குறைந்தளவு வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்குச் செல்லும்.
2. பூரண மிதக்க விடலின் கீழ் பெரியளவு ஊக வாணிப நடவடிக்கைகள் இடம்பெறலாம்.
3. பூரணமிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீத முறைமையின் கீழ் பணக்கொள்கை மற்றும் இறைக் கொள்கை என்பவற்றை சுதந்திரமாகக் கையாளலாம் ஆயினும் ஒரு பொறுப்பற்ற அரசாங்கம் இக்கொள்கைகளை துஸ்பிரயோகம் செய்ய வாய்ப்புள்ளது.

**(எவையேனும் இரு குறைபாடுகளுக்கு 04 புள்ளிகள் 05 புள்ளிகள்)**

**9.** (i) 'உற்பத்தித் திறன்' என்ற எண்ணக்கருவினால் கருதப்படுவது என்ன? உற்பத்தித் திறனை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை? (05 புள்ளிகள்)

- உற்பத்திதிறன் என்பது ஓரலகு உள்ளீட்டின் மூலம் பெறப்படும் வெளியீட்டின் சதவீத அளவையாகும்.

அல்லது

உற்பத்தித் திறன் $= \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$

பின்வருவன உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கின்றன.

1. உழைப்பின் தரம் (கல்வி, தொழிற்பயிற்சி, அனுபவம்)
2. தொழில்நுட்பம்
3. புத்தாக்கம் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)
4. மூலதன முயற்சி
5. நிதிச் சந்தையின் அபிவிருத்திகள்
6. இயற்கை வளங்கள்
7. உட்கட்டமைப்பு வசதிகள்
8. நிர்வாகக் கட்டுப்பாடுகள்
9. தொழில் ஒழுக்கங்களும் மனோபாவங்களும்

**( நான்கு காரணிகளுக்கு 04 புள்ளிகள் )**

(ii) "வாழ்க்கைத்தரத்தை அளவிட தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தின் (Gross National Income - GNI) வளர்ச்சியானது போதுமானதோர் அளவையன்று." விளக்குக. (05 புள்ளிகள்)

- தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு என்பது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் மொத்த தேசிய வருமானத்தில் சராசரியாக ஒருவர் பெறும் வருமான அதிகரிப்பைக் கருதும்.

  PGNI என்பது சராசரி தேசிய வருமானத்தை மட்டுமே பிரதிபலிக்கும் வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதில் அது போதுமானதாக ஒரு அளவையன்று.

**(02 புள்ளிகள்)**

- வாழ்க்கைத் தரம் என்பது ஒரு பண்புசார் விடயமாகும். மகிழ்ச்சி, நியாயத்துவம், ஓய்வு, சூழல் மாசடைதல் ஒப்புரவு, மனித உரிமைகளு டன் கூடிய தனிமனிதனின் கௌரவம், பாகுபாடுகள் இல்லாமை, சமமாக நடத்தப்படல் போன்றன பால் நிலை, இனம், மொழி, மதம், அரசியல் நம்பிக்கைகள் மற்றும் சமூக பொருளாதார அந்தஸ்து என்பவற்றிற்கு அப்பால் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

**(02 புள்ளிகள்)**

- தனிமனிதனின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கும் காரணிகளில் தொழில்புரியும் இடத்தின் சூழல், சுகாதார நிலை, கல்வி நிலை, பொருள்சார் வாழ்வியல் நிலை என்பன சில காரணிகளாகும்.

**(01 புள்ளி)**

- எனவே வாழ்க்கைத் தரத்தை அளவிட PGNI இல் ஏற்படும் வளர்ச்சியானது போதுமான அளவையல்ல அத்துடன் பிழையான முடிவுகளுக்கு இட்டுச் செல்வதாயும் உள்ளது.

**(01 புள்ளி)**

(iii) மானிட அபிவிருத்திச் சுட்டெண் என்றால் என்ன? அபிவிருத்தி பற்றிய ஏனைய அளவைகளோடு ஒப்பிடுகையில் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் யாவை? (05 புள்ளிகள்)

- மனித அபிவிருத்திச் சுட்டெண் என்பது சுகாதார் மற்றும் நெடுவாழ்வு, கல்வி ( அறிவு ) வாழ்க்கைத்தரம் ஆகிய மனித அபிவிருத்தியின் முப்பரிமாணங்களை இணைத்த ஒரு கலப்புச் சுட்டெண்ணாகும்.

**(01 புள்ளி)**

நன்மைகள்

1. HDI ஆனது அபிவிருத்தியின் ஏனைய அளவைகளுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமானது. ஏனெனில் ஏனைய அளவைகள் பெரும்பாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவை நாட்டுக்குள்ளும் நாடுகளுக்குமிடையில் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிடுவதற்கு போதுமானவையும் சரியானவையுமன்று

2. பண ரீதியான ஒரு கூட்டு அளவையாக உள்ளதால் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி மனித அபிவிருத்தியின் சமூக பரிமாணங்கள் குறித்து அது கவனம் செலுத்துவதில்லை. ஆனால் HDI ஆனது மனித அபிவிருத்தியின் முப்பரிமாணங்களை உள்ளடக்கியுள்ளது.

3. சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையில் அபிவிருத்தி பற்றிய ஒப்பீட்டை மேற்கொள்ள HDI உபயோகமுள்ள ஒரு அளவையாகும்.

4. ஏனைய கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் சமூக ரீதியான கொள்கைகள் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை அறிய HDI உதவுகிறது.

5. HDI ஐ கணிப்பிடுவதற்கான தகவல்கள் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் வருடாந்தம் திரட்டப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

**(இரண்டு நன்மைகளுக்கு 02 புள்ளிகள்)**

குறைபாடுகள்

1. ஒரு கலப்புச் சுட்டெண்ணாகையால் அபிவிருத்தியின் உள்ளக ஏற்றத் தாழ்வுகளை அது குறித்துக் காட்டாது.

2. மனித வாழ்வின் சகல பரிமாணங்களையும் HDI உள்ளடக்குவதில்லை. அடிப்படை இயலுமையின் முப்பரிமாணங்கள் பற்றிய அது கவனஞ் செலுத்துகிறது. ஏனைய விடயங்களான பங்குபற்றல், அரசியல் சுதந்திரம், மனித பாதுகாப்பு போன்ற முக்கிய விடயங்களை அது கருத்திற் கொள்ளவில்லை.

3. HDI யின் முப்பரிமாணங்களுக்கு சமமான நிறையிடல் வழங்கப்பட்டுள்ளது.

4. தரம் பற்றிய விடயங்கள் HDI யில் உள்ளடக்கப்படவில்லை ( பாடசாலை கல்வியின் தரம் சுகதேகியான ஒருவர் மேலும் வருடம் வாழ்வதற்கான வாய்ப்பு, மட்டுப்படுத்தப்பட்ட இயலுமையுடைய நபர்கள் சிறப்பாக இயங்குவதற்கான வாய்ப்பு)

5. HDI சூழலியல் காரணிகளை கருத்தில் கொள்ளவில்லை

(இரண்டு குறைபாடுகளுக்கு 02 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கடுமையான வறுமை நிலைக்கான காரணங்கள் யாவை? (05 புள்ளிகள்)

- கடும் வறுமை என்பது நபர் ஒருவர் நாளொன்றிற்கு 1.90 அமெரிக்க டொலருக்கு குறைவான வருமானத்தில் வாழ்க்கையை நடத்தும் நிலையாகும்.
  இக்கடும் வறுமை 2009 / 10 மற்றும் 2012 / 13 காலப்பகுதியில் 2.4 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

**(02 புள்ளிகள்)**

கடும் வறுமைக்கான காரணங்கள்

1. இளைஞர்களுக்கான வருமானம் உழைக்கும் வாய்ப்புக்கள் குறைவு
2. தூரப் பிரதேசங்களில் வாழ்கின்றமை. / பின் தங்கிய பிரதேசம்
3. வினைத்திறனற்ற சமூக உதவித்திட்டங்கள்
4. விவசாயத் துறையின் குறைந்த உற்பத்தித் திறன்
5. உட்கட்டுமானங்கள் குறைவாக உள்ளமை.
6. விவசாயத்தை நம்பியுள்ள வீட்டுத் துறைகளில் வாழ்கின்றமை
7. குறைந்த கல்வி மட்டத்தைக் கொண்டுள்ளமை
8. உடல் ரீதியான பலவீனங்கள்
9. வயோதிப நிலையில் உள்ளமை
10. காணி சொத்துரிமை இல்லாமை
11. போசாக்கின்மை
12. யுத்த சூழல் காரணமாக உள்ளூர் இடப்பெயர்வு

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்)**

**10.** (i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகள் அரசியல் ஆட்சிமாற்றங்களுடன் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதைச் சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்திக் கொ.ள்கைகள் கடற்த ஏழு தசாப்தங்களாக அரசாட்சி மாற்றங்களுடன் மாறிச் செல்வனவாக இருந்தன.
அரசாட்சி மாற்றங்களுடன் அபிவிருத்திக் கொள்கை மாற்றங்கள் இடம்பெற்ற விதம் பின்வருமாறு

1. 1948 – 1956 : ஜனரஞ்சக பொருளாதாரக் கொள்கைகளுடன் திறந்த பொருளாதாரம்
   ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் ஜனரஞ்சகமான சமூக நலன்புரித் திட்டங்களை (உதாரணம் : உணவு மானியத் திட்டம்) அமுல்படுத்தியது காலனித்துவ ஆட்சியாளர்களால் அறிமுகம் செய்யப்பட்ட அரச தலையீட்டுடன் கூடிய தாராள பொருளாதாரக் கொள்கையை தொடர்ந்து அரசாங்கத்தின் வகிபாகம் கலப்புத் தன்மை வாய்ந்ததாக மாறியது.

2. 1956 – 1965 ஜனரஞ்சக கொள்கைகளுடன் கூடிய கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம்
   1956 இல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கூட்டரசாங்கமாக உருவாக்கப்பட்டது. அரசாங்க முதலாளித்துவம், அரசாங்கத்தின் பரவலான வகிபாகம், அரசாங்கத் துறையின் கீழ் உபாய ரீதியில் முக்கியமான கைத்தொழில்களின் ஆரம்பம், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்குச் அரசாங்க பாதுகாப்பு, உள்ளூர் கைத்தொழில் மயமாக்கலுக்கான இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை மற்றும் பத்தாண்டுத் (1959 – 1968) திட்டம் என்பன அறிமுகம் செய்யப்பட்டன.

3. 1965 – 1970 மட்டுப்படுத்தப்பட்ட தாராண்மை வாதக் கொள்கைகள்
அரசாட்சியானது ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலானக கூட்டமைப்பின் கைகளுக்கு மாறியது உற்பத்தி மற்றும் பங்கீட்டில் இந்த அரசாங்கம் சந்தைப் பொறிமுறையைக் கையாண்டது. அரசதுறை முயற்சிகளை தவிர்த்து அரசாங்கக் கொள்கைகள் உட்கட்டுமாண வசதிகளை அபிவிருத்தி செய்வதை மையப்படுத்தியதாக இருந்தன. அத்தோடு பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளின் ஊக்குவிப்பு இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், விவசாய அபிவிருத்திக் கொள்கை என்பனவும் இவ்வரசாங்கத்தின் நோக்கங்களாக இருந்தன.

4. 1970 – 1977 மூடப்பட்ட பொருளாதாரத்துடன் இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில் மயமாக்கல்
சுதந்திரக் கட்சி தலைமையிலான முன்னணி சீர்த்திருத்தங்களுடனான ஆட்சியைக் கைப்பற்றியது. சீர்த்திருத்தங்களூடாக இலங்கையை சோசலிச நாடாக மாற்றுவதாக உறுதியளித்தது. உள்நோக்கிய இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

5. 1977 –2005 பொருளாதாரத் தாராள மயமாக்கம்
அரசாட்சி மாற்றம் காரணமாக மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியது. பொருளாதாரக் கொள்கைகள் மீண்டும் தனியார் துறையை ஊக்குவிப்பதாக அமைந்தது பொருளாதார தாராளமயமாக்கம் மீண்டும் ஆரம்பித்தது.

திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் வெளிநோக்கிய கைத்தொழில் மயமாக்கமும் அறிமுகம் செய்யப்பட்டன.

பொருளாதார தாராள மயமாக்கலின் இரண்டாம் கட்டம் UNP அரசாங்கத்தினால் 1988 – 1994 வரை யில் முன்கொண்டு செல்லப்பட்டது. 1994 இல் பதவிக்கு வந்த UPFA அரசாங்கம் இதே கொள்கையை திறந்த பொருளாதாரத்திற்கு ஒரு மனித முகத்துடன் என்ற கொள்கையாக முன்னெடுத்தது. 2002– 2004 சிறு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் திறந்த கொள்கைகளைத் தொடர்ந்தது.

6. 2005 – 2015 பொருளாதாரக் கொள்கைகள் பாதுகாப்பு வாதக் கொள்கைகளுடன் போருக்குப் பிந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2005 இல் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஸ்ரீகுயு அரசாங்கம் மீண்டும் ஆட்சியமைத்தது. தாராண்மை வாத கொள்கைகளை நிராகரித்த அரசாங்கம் தேசிய பொருளாதாரக் கொள்கைகளில் அதிக கவனம் செலுத்தியது. அத்துடன் உள்நாட்டு விவசாயம் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பன கவனத்திற்குரிய விடயங்களாக அமைந்தன.

தனியார் மயமாக்கல் முற்றாக நிராகரிக்கப்பட்டது பாரியளவிலான மெகா உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் போருக்குப் பிந்திய காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டன.

7. 2015 இலிருந்து அறிவை மையப்படுத்திய சமூக சந்தைப் பொருளாதாரம்
அரசாட்சி மாற்றம் 2015 இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கைகளுக்கு அதிகாரத்தை வழங்கியது விசன் ( தூர நோக்கு )2025, 2017 – 2020 அரசாங்க முதலீட்டுத் திட்டம் தேசிய ஏற்றுமதி உபாயம் (2018 – 2020) ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

பேணத்தகு அபிவிருத்தி இலக்குகள், நல்லாட்சி கொள்கைகள் பின்பற்றப்பட்டன. தாராள வர்த்தக உடன்படிக்கைகள் இருபக்க வர்த்தக உடன்படிக்கைகள், அரச தனியார் பங்குடமைகள், ஏற்றுமதிகளால் பொருளாதார வளர்ச்சி, முன்னேறிய தொழில் நுட்பம் மற்றும் உற்பத்தித் திறன் மனித அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, வேலையின்மை பிரச்சினைத் தீர்வு, அறிவை மையப்படுத்திய சமூக சந்தைப் பொருளாதாரக் கொள்யையின் ஊடாக அபிவிருத்தி என்பன இவ்வரசாங்கத்தின் நோக்கங்களாகும்.

(ஏதாவது 5 அரசாட்சி மாற்றங்கள் பற்றிய சுருக்கமான விளக்கங்கள் தரப்படின் 05 புள்ளிகள்)

மேலே கூறப்பட்டதன்படி இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகள் எந்த அரசியல் கட்சி அதிகாரத்தில் உள்ளது என்பதன் அடிப்படையில் மாற்றமடைந்திருந்தன.

(ii) "மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்களைப் பிற்போட்டமையானது இலங்கைப் பொருளாதாரத்தை தற்போது மிகக் குறைந்த வளர்ச்சிப் பாதையில் தள்ளிவிட்டுள்ளது." இலங்கையினால் நடைமுறைப்படுத்தல் பிற்போடப்பட்டுள்ள வளர்ச்சியை ஊக்குவிக்கும் இத்தகைய சீர்திருத்தங்கள் யாவை? (05 புள்ளிகள்)

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் கட்சிகள் நிலையான தேசிய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதிலும் இணங்கிச் செயற்படுவதிலும் தோல்வியடைந்துள்ளன.

1. பொது நிர்வாகத்தை வலுப்படுத்தல் ( சிக்கலான தாபன ரீதியிலான நடைமுறைகள் அரச துறையிலே நிலவுகின்றன.)

2. அரச தொழில் முயற்சிகளை சீர்த்திருத்தம் செய்தல்.

3. காரணிச் சந்தை சீர்த்திருத்தங்கள் ( உதாரணமாக ஊழியச் சந்தை சீ.ர்த்திருத்தங்கள் நெகிழ்வு தன்மை வாய்ந்த வேலை மணித்தியாலங்கள், குறைந்த கட்டுப்பாடுடைய வேலை நிபந்தனைகள்)

4. சட்டவாட்சியை உறுதிப்படுத்தும் சீர்த்திருத்தங்கள்

5. ஏற்றுமதி ஊக்குவிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்தல், பங்கீட்டு பற்றாக்குறையை குறைத்தல், கடன் மட்டங்களைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகளில் மேற்கொள்ளல்.

(iii) இலங்கையின் முதலீடுகளுக்குத் தடையாகவுள்ள முதலீட்டுச் சூழலிலும் காரணிச் சந்தைகளிலும் நிலவும் குறைபாடுகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

1. நிர்வாக நடைமுறைகைளை பின்பற்றுவதற்கான செலவுகள் அதிகமாகும். நிர்வாக நடைமுறைகளை நடைமுறைப்படுத்தும் முகவர்ங்கள் மீதான நம்பிக்கையின்மை

2. உட்கட்டுமானங்கள் தரம் குறைவாக இருத்தல் குறிப்பாக சக்தி வளம், போக்குவரத்து, மின்சாரம் என்பவற்றிற்கான செலவுகள் அதிகம். அவற்றின் நம்பகத்தன்மை குறைவு

3. நிதி வசதிகளை பெற்றுக் கொள்வது கடினமானதும் செலவு கூடியதுமாகும்.

4. ஊழியச் சந்தையின் இறுக்கத்தன்மை, திறன்மிக்க ஊழியம் பற்றிய பிரச்சினைகள்.

5. பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை.

(01 பிரச்சினைக்கு 01 புள்ளி மொத்தம் 05 புள்ளிகள்)

(iv) "இலங்கையின் பொதுப்படுகடன் மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும் அதேவேளை கடன் உள்ளடக்கமானது கடனின் நிலைபேறுடைய தன்மை தொடர்பில் குறிப்பிட்டளவு இடரபாயங்கள் நிலவுவதைச் சுட்டிக்காட்டுகிறது." விசேடமாக இலங்கையின் பொதுப்படுகடனின் அளவு, அதன் உள்ளடக்கம் தொடர்பில் கவனம் செலுத்தி இக்கூற்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

- கடன் பேணதகு தன்பது என்பது நிகழ்கால மற்றும் எதிர்கால கடன் தேவைகளை ஒரு நாடு பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலைக் குறிக்கும். இதனை கடன்களை மீளக் கால அட்டவணைக்குட்படுத்தாமலும் பிரதான இறைச் சீராக்கங்களை மேற்கொள்ளாமலும் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

**(01 புள்ளி)**

- உயர் மட்டப் பொதுப்படுகடன்
  மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரசாங்கக் கடன்களின் சதவீதம் 2017 இல் 76.9 வீதத்திலிருந்து 2018 இல் 82.9 வீதமாக அதிகரித்தது.

  அல்லது

- மொத்த வெளிநின்ற அரசாங்ப் படுகடன் 2017 இல் 10, 313 பில்லியன் மொத்த ரூபாவிலிருந்து 2018 இல் 11 977.5 பில்லியன் ரூபாவாக 16.1 வீதத்தினால் அதிகரித்திருந்தது. **(01 புள்ளி)**

கடன் உள்ளடகத்தின் தன்மை
மொத்த உள்நாட்டு உற்பத்திகளின் உள்நாட்டுப் கடனன்களில் சதவீதம் 2017 இல் 41.7 சதவீதத்திலிருந்து 2018 இல் 41.6 சதவீதமாக மிக சிறியதொரு வீழ்ச்சியை பதிவு செய்தது.

மொத்த உற்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டு கடன்களின் சதவீதம் 2017 இல் 35.2 வீதத்திலிருந்து 2018 இல் 41.2 வீதமாக குறிப்பிடதக்களவு அதிகரிக்கும்.

அல்லது
வெளிநாட்டு நாணயப் பெறுமதியில் உள்நாட்டு கடன்கள் 2017 ல் 702.1 பில்லியன் ரூபாவிலிருந்து 2018 714.7 பில்லியன் ரூபாவாக விளிம்பு நிலையில் அதிகரித்தது.

அல்லது
வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் 2017 இல் 4718.6 பில்லியன் ரூபாவிலிருந்து 2018 ல் 5959.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

அல்லது
2018 இல் சலுகையல்லாக் கடன்கள் 55% வெளி நாட்டு சலுகைக் கடன்கள் 45% வெளிநாட்டு சலுகைக் கடன்களில் பெரும்பாலானவை சர்வதேச இறைமை முறிகளாகும்.

அல்லது
மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற கடன்களின் உள்ளடக்கம் 2018 இல்

இலங்கை ரூபா 46% ஐக்கிய அமெரிக்க டொலர் 32% சர்வதேச எடுப்பனவு உரிமை 8% ஜப்பானிய யென் 5% யூரோ 2% மாக இருந்தது. **(01 புள்ளி)**

இலங்கையின் பொதுப்படுகடனின் உள்ளடக்கம் மற்றும் அதன் அளவு என்பவற்றைக் கருதும் போது கடனை பேணதகு மட்டத்தில் பேணுவது மிகவும் முக்கியமாகும். அல்லாவிடில் இடரபாயங்களை சந்திக்க நேரிடும்.

உயர்தர மற்றும் அதிகரிக்கும் கடன் மட்டங்கள் இறை மற்றும் பணக் கொள்கைகளை வினைத்திறனற்றதாக மாற்றிவிடும் அரசாங்கக் கடன் அதிகரிப்பு பாதீட்டுக் குறை நிலைகளை இடர் அபாயத்திற்குள் தள்ளிவிடும்.

தனிநபர் வருமானம் அதிகரித்த படியினால் சலுகைக் கடன்கள் பெறமுடியாதுள்ளது. எனவே சலுகையற்ற வணிகக் கடன்களையும் குறுங்காலக் கடன்களையும் உயர் வட்டி வீதத்தில் பெற வேண்டிய இடரபாயம் உள்ளது.

நாணயமாற்று வீதம் பெறுமதி தேய்வுக் கடன் கட்டமைப்பை மேலும் அதிகரிக்கும்.

(இடரபாயத்திற்கு 01 புள்ளி மொத்தம் 02 புள்ளி)